ஓ

பரமபதிதுணை.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

வைத்தியபூரணம்-ஊரும்

அசற்கு சூஸ்த்திரம் உலகம் சேர்ந்தது

மதுரையானைக்கல் தெரு வித்வான்

மு குழந்தைவேலுப்பிள்ளை அவர்கள்

ஓலை ஏட்டுப் பிரதியின்படி

மதுரைப்புதுமண்டபம் புஸ்தகஷாப்

இரா. ம.

குருசாமிக்கோனர்

அவர்களால்.

தமது

மதுரைவடக்குமாசிவீதி

குருசாமிக்கோனர்தெரு

ஸ்ரீரமச்சந்திரவிலாசம்பிரஸில்

பதிப்பிக்கபெற்றது.

இதன் விலை அணா 12

ரிஜிஸ்தர் காப்பிரைட்

உ

பரமபதிதுணை.

அகஸ்தியர் வைத்திய பூரணம் ஊடுருக்கு

சூஸ்திரம் சுருக்கம் உகு.

காப்பு

ஆதியிலே யெனைவளர்த்த வாலைகாப்பு
அடைவான யிருநூற்றினந்திலேதான்
நீதியுளபற்பமுடன் தயிலஞ்சொன்னேன்
நேர்மையுடன் சிலசரக்கை மறைதுவிட்டேன்
சோதிமயச் சரக்கெல்லா மிதிலெடுத்து
சொல்லிவிட்டே னெல்லோரும் பிழைக்கவேண்டி
பாதிமதி தனையணிந்தோன ருளினாலே
பச்சமுடன் பாடுகிறேனறிவாய்க்கேளே

கேளப்பா நவலோக மாரணந்தான்
கெடியானவயித்தியமா மிருநூற்றஞ்சில்
தேளப்பா கொட்டுதல்போ லிந்தச்சூஸ்த்ரம்
செப்புவேனிருப்புக்குத் தாரங்கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத்துக்கு
மால்தேவி வெடியுப்பு வெள்ளைச்சீனம்
சூளப்பா செம்புக்குக் கெந்திவங்கம்
சூதமொடு துருசுவெள்ளை சாரமூன்றே, (1)

ஏகமூலிகைக்குப் பூதமருந்து.

சாரமது நாகமன தத் தாக்கிக்கொல்லும்
சதாசிவமாந் தங்கமது கண்டால்நீறும்
காரமொடு அப்பிரேகம் நிமிளைசாகும்
கண்டபடி பித்தளையைக் கட்டிக்கொல்லும்
பாரமடா யேகமூலிகைக்குக் கேளு
பாஷணம் நவச்சார்ம் சீனம் பூரம்
வீரமொடு புழுகுவெடி யுப்புக்காரம்
விதமான சூதமொடு பூநீர்கெந்தி. (2)

கெந்தியுடன் வகைவீதஞ்சமனுய்ச்சேர்த்து
கெடியான பழச்சாற்றி லாட்டிமைபோல்
பந்திவிட்டுச்செய்பாதே மருந்தைப்பூசி
பச்சிலையில் நீரும்மூன் பகர்ந்ததெல்லாம்
மூந்தியிந்தக்,குருசெய்தா லுறுதியாகும்
மூறையான வைத்தியநூ லொன்றும்பொய்பா
வந்தியென்ற துருசுநீர் கூடச்சேரு
வாகான வயித்தியத்திற்குருவிதாமே (3)

தானென்ற தைலத்தின் மருந்தையெல்லாம்
சாற்றுவேன் சவுரிவேர்த் தைலத்துக்கு
கானென்ற மரமஞ்சள் விடையத்தோடு
கருஞ்சீரம் பலமைதா னரைத்துக்கொண்டு
ஊனென்ற யெண்ணெயிலே கூடப்போடு
ஓகோகோ வில்வவேர்த் தைலத்துக்கு
நானென்ற கடுக்காய் கஸ்தூரி மஞ்சள்
நலமான ஏலஞ்சந் தனமுமாமே. (4)

ஆமப்பா வகைக்குக்காற் பலமரைத்து
அதைக்காய்ச்சு வேங்கையுட தைலத்துக்கு
நாமப்பா மிளகுள்ளி யோடே நீயும்
நற்சீரம் விலாமிச்சம் வேருங்கூட
வாமப்பா வகைக்குபல மரைத்துப்போடு
வகையான வெட்டிவேர்த் தைலத்துக்குத்
காமப்பா கருஞ்சீரந் தேவதாரம்
கடுக்காயும் அதிமதுரம் பலந்தான்போடே (5)

போடப்பா வேம்பினுட தைலத்துக்குப்
புகழான ஏலமொடு மிலந்தைவேரும்
நாடப்பா பழம்பாசி அக்கிராகாரம்
நலமாக வகைக்குபல மரைத்துப்போடு
பூடப்பா குறுந்தொட்டித் தைலத்துக்கு
பொங்கமுள்ள சுக்குஒன்று ஏலமொன்று
ஆடப்பா வகைக்குபல மரைத்துப்போடு
ஆகவே பதமாகக் காய்ச்சுகாய்ச்சே, (9)

காச்சடா கொடிவேலித் தைலத்துக்கு
காணடா கருஞ்சீரம் நற்சீரந்தான்
தாச்சடா தாளிசப்பத் திரியுங்கூடத்
தாணிக்காய் வகைக்குப்பல மரைத்துப்போடு
வீச்சடா சீரகத்தின் தைலத்துக்கு
மிளகுகார் கோலரிசி நற்கற்கண்டு
ஆச்சடா கருவேம்பி னிலையின் தண்டு
அவைவகைக்குப் பலவீதமரைத்துபோடே (7)

அரைத்துமே சூரிவேர்த் தைலத்துக்கு
அப்பனே வேம்பினுட பிசினுஞ் சுக்கு
குரைத்துமே போகாமற் காடிகூட்டிக்
குணமாகத் தானரைத்துப் போடுபோடு
உரைத்துமே ஆச்சுசிலின் பிசினுங்கூட
ஓகோகோ வகைக்குப்பலமரைதான்போடு
நிரைத்துமே இத்தைலம் பாகமாக
நேர்மையுடன் முனிருக்கும்மூடித்துப்போடே (8)

போடப்பா கீழ்நெல்லித் தைலத்துக்குப்
போடுவேர்ப் பூமிச்சர்க் கரையுங்கூட
வேடப்பா பலமொன்று அரைத்துச்சேர்த்து
வேம்பினுட பிசிலோடு கடுகாய் கூட
காடப்பா பலமரைத்து மூன்றுங் கூட்டிக்
காடிவிட்டுத் தானரைத்துக் கலக்கியேதான்
நாடப்பா தைலமதைச் செய்துகொண்டு
நலமான சட்டிதனி லூற்றிப்போடே. (9)

போடப்பா சங்கவேர்த் தைலத்துக்குப்
புகழ் கருஞ்சீ ரகமேலம் மிளகிலோடு
நாடப்பா மாச்சக்காய் வகைவகைக்கு
நவிலுமோர்பல வீதம் நிறுத்துக்கொண்டு
பாடப்பா எண்ணெயிலே அரைத்துப்போடு
பதமாகப் பருவமுடன் காய்ச்சியேதான்
கூடப்பா சட்டிதனி லிருத்துக்கொண்டு
கூடும்வரை காச்சலற ஆறவையே. (10)

காச்சப்பா அமுக்கிராவேர் தைலத்துக்கு
காடியுடன் பழச்சாறும் நொச்சிசாறும்
மேச்சப்பா எருக்கின்பூச் சாறுங்கூட
மேன்மையுட னுட்டியே வகைக்குத்தானும்
வாச்சப்பா ஒன்றுக்குக் கால்ப்படிசார்
வகையாகக் கிண்டியே கூட்டிக்காய்ச்சி
மாச்சப்பா தைலத்தின் பாகந்தன்னை
மற்றவர்க்குக் கிண்டுமுறை செப்பிடாதே. (11)

கிண்டப்பா இஞ்சியுட தைலத்துக்குங்
கேள் நொச்சிச்சாறுடனே பசுவின்பாலும்
கண்டப்பா வகைக்கு அரைப் படியாய்விட்டுக்
கசடில்லா யெண்ணையுடன்காய்ச்சிக்கொள்ளு
அண்டருக்குந் தெரியாது இந்தப்பாகம்
அப்பனே வெளியாகச் சொல்லிவிட்டேன்
கண்டுகொண்ட பேர்களுக்கு கிட்டுங்கிட்டும்
கணக்கறியா னித்தைலங் காச்சுவானே. (12)

காச்சப்பா செம்முள்ளித் தைலத்துக்கு
கண்டகருஞ் சீரகங்கற் கூவேரும்
வாச்சப்பா கார்கோல அரிசிகூட
வகைக்கு அரைப்பலமைத்துக் காய்ச்சிப்பாரு
நீச்சப்பா தைலத்தின் பாகந்தானும்
நேரான மெழுகுபதந் தெரிந்துகொண்டு
பாச்சப்பா பாண்டத்தில் வடிதான்கட்டிப்
பண்புடனே மாயவனைதன்னைத்தாண்டே. (13)

தாண்டவே யிருவேலித் தைலத்துக்குத்
தாளிச்சார் பழச்சாறும் கையான்சாறும்
தீண்டவே வகைக்குக்காற் படிதான்சேர்த்துத்
திறமாய்நல்லெண்ணெயதிற்கலந்துகொண்டு
வேண்டியதோர் தீயதனைச் சிறுகெரித்து
மெழுகுபதங்கண்டறிந்து தைலந்தன்னை
ஆண்டவனைத் தோத்தரித்து இறக்கிவைத்து
அப்பனே காய்ச்சல்தனை ஆறவையே. (14)

காச்சப்பா நற்கரிப்பான் தைலத்துக்கு
கற்றுளஞ் சாறுதெல்லிக்காயின்சாறும்
நீச்சப்பா வகைக்குக் காற் படியெடுத்து
நீட்டியகஸ் தூரிமஞ்சளரைப்பலந்தான்
ஏச்சப்பா சாதிக்கா யரைத்துப்போட்டு
எண்ணெயுடன்தான்கரைத்து வைத்துக்கொண்டு
வாச்சப்பா அடுப்பதனி லேற்றிநன்றாய்
வகையுடனே காய்ச்சியதையிறக்கிவையே (15)

காச்சப்பா அகிர்கட்டைத்தைலத்துக்குக்
கனமான அதிமதுரந் தாணிக்காயும்
வீச்சப்பா வகைக்குபல மரைத்துப்போடு
வீரான அறுகம்வேர்த் தைலத்துக்கு
கூச்சப்பா கோரையுட கிழங்கிரெண்டே
கூரான அமுக்கிரா கூடக்கூட்டி
வாச்சப்பா பூமிசர்க் கரைகிழங்கு
வகைக்குகாற் பலமாகநிறைநிறுத்தே (16)

நிறுத்துநீ கல்வத்தி லாட்டிக்கொண்டு
நேராக பெண்ணெயிலே அரைத்துப்போடு
சிறுத்துநீ போட்டிடுவா யப்பாசேரு
திறமான கொடுப்பையுட தைலத்துக்கு
மறுத்து கருஞ்சீரகமுங் கோஷ்டங்கூட
மதுரமுடன் செங்கழுநீர் ஆவின்பாலும்
உறுத்துமே வகைக்குபல மரைத்துப்போடு
உத்தமனே சென்னகரைப் பட்டைகேளே (17)

கேளப்பா வேப்பெண்ணெய் படிதானொன்று
கெடிவசம்பு வெள்ளுள்ளி பலந்தானொன்று
சூளப்பபா வெட்டிவேர் பலந்தானொன்று
சுருளவே கூட்டி நன்றாயரைத்தெடுத்து
நாளப்பா யெண்ணெயிலே சேர்த்துக்கொண்டு
நலம்பெறவே பதமாய்ப் பாண்டத்திலூற்றி
வாளப்பா அடுப்புதனிலேற்றி நீயும்
மைத்தனே சிறுதீயாலெரித்துக்காய்ச்சே (18)

காச்சென்ன அபினியுட தைலத்துக்குக்
கண்மணியே சங்கிலேகற் முவேரெண்டும்
பேச்சென்ன வகைக்குக்காற் படிவீதந்தான்
பெலமான தைலத்திலிட்டு மேதான்
வாச்சென்ன அடுப்பேற்றிச் சிறுதியாலே
மைந்தனே மெழுகுபதத்துடனேகாச்சு
காச்சுகின்ற யிருப்பவலின் தைலத்துக்கு
கறிமஞ்சள் கஸ்தூரி மஞ்சளாமே (19)

மஞ்சளுடனிருவகையும் பலந்தான் கூட்டி
மாண்புடனே அரைத்தெண்ணெய்யதினிற்சேர்த்து
தஞ்சமுட ணெண்ணெய்தனைக் காய்ச்சி மூழ்க
சகலபிணி தீர்ந்திடுவ தல்லால்வேறே
வஞ்சியரி ஞசைதனைத் தள்ளவேணும்
மகத்தான பெரியோரின் முறையைத்தானே
எஞ்சலுடன் செய்துவயிர் பிழைக்கவேணும்
என்மகனே நாமறிந்த விதந்தான்பாரே. (20)

நாமப்பா பற்பமுதல் தைலப்போக்கை
நன்முகக்கருக்கடையிற் பாகஞ்சொன்னேன்
தரமப்பாபூரணந்தா னிருநூற்றைஞ்சில்
தவருமற் செய்தாக்கா லிதற்கிடாமோ
வாமப்பா சுருக்கமதை தெளிந்தேதான்றன்னே
வைத்தியத்தில்தேர்ச்சியென்றுமதித்துக்கொள்ளு
நாமப்பா வெளியாகச் சொன்னேன்பாரு
நற்சுருக்க மிருபத்து ஒன்றுமுற்றே (21)

வேண்பா.

வங்கம்செம் பொன்னுக்காம் மாச்சியம் வெள்ளிக்காம்
எங்கும்லிங் கங்க ளிருப்புக்காம்—தங்கத்தைத்
தாமே கொன்றுவிடுந் தள்ளாத போகமதாம்
சேரும்செம் புக்குகெந்தி தேர்

அகஸ்தியர் வைத்திய சூஷ்திரச்சுருக்கம்
முற்றிற்று.

கடவுள் துணை.

அகஸ்திய முனிவர்

திருவாய் மலர்ந்தருளிச் செய்த

வைத்திய பூரணம் - உரு



காப்பு.

ஆதிமுதற்பூரணமாம் பொருளைப்போற்றி
அம்பிகையினடிபகலு மல்லும்போற்றி
ஜோதிமிகுகாரணசற் குருதாட்போற்றி
சொலற்கறியநாதாக்கள் துணைத்தாட்போற்றி
வேதன்மகிழ்கலைவாணி சரணம்போற்றி
வேதாந்தவிளக்கொளியின் கமலம்போற்றி
நாதமிகுமாருதா ரத்தாட்போற்றி
நளினமிகுங்கணபதிபூ ரணத்தாட்காப்பே.

பிணிவருறதோ்மை

பூரணமாய்மும்மூலம் பொறியிற்சூடாம்
புகையெழும்பிமேகத்தாற் சிரசிற்சூடாம்
காரணமாய்நீர்கலந்து கனரோகங்கள்
கனன்றெழுந்தவாய்வதனற் சூலரோகம்
வாரணமாய்வாதத்தி லெழுந்தமேகம்
மத்தியமாம்பித்தத்திற் கிராணியாச்சு
தாரணமாய்வாய்வதனற் குன்மமாச்சு
சார்ந்திடவேசிலேற்பனத்தான் ஜயமாமே- (1)

ஆமப்பாவாதத்தா லிரணமுண்டாம்
அஸ்திமினிற்சூடுகொண்டாற்சுரங்கள்காணுங்
காமட்பாலவியினல் மேகமுண்டாங்
கைகடந்தபோகத்தால் ரோசமாச்சு
தாமப்பாமேகத்தாற் பிறந்தரோகந்
தாணியினலாயிரத்துச் சில்வானைந்தான்
ஓமப்பாமேகங்க ளிருபத்தொன்றும்
உலகத்தில் நீரிழிவாயுதித்தவாறே. (2)

வாருனபித்தத்தா லுஷ்ணரோகம்
மருவியதோர்வாதத்தாற் சீதரோகந்
தேருதவையத்தாற் கபரோகத்தான்
திரண்டெழுந்தவாயுவினுல் மூன்றுமாச்சு
கூருனதசவாய்வு தொந்தங்கொண்டு
கொடியகனல்வாதமுடன் வித்துவாகி
ஏருதவிந்ததனிற் பிறந்தமேக
மெழுந்தபித்த சிலேர்ப்பனத்திலிருந்ததாமே. (3)

ஆமிந்தநூற்குநிகரொன்றுமில்லை
மறிந்திந்தநூல் பார்த்தாற் சித்தர்க்கொப்பும்
போமேகேள் நூல்கண்டால் நோய்கள்போகும்
பொன்வெள்ளிரண்டுமிந்த நூலுக்குள்ளே
நாமப்பா நுணுக்கமுண்டுயார்க்குச்சொன்னேம்
நல்லோர்க்குசொல்லியே நாட்டவேணும்
ஓமிந்தநூல்பார்த்து வயித்தியஞ்செய்தால்
உத்தமனேபிர்மஷிக் கொப்பாங்சாணே. (4)

காணப்பாபோக மூலிகையிலுலே
கட்டானகிரதங்கள் சூரணங்கள்
பூணப்பாதைலங்கள் பர்ப்பங்கள்தான்
பூட்டினேன்ரசாயணங்கள் கியாழத்தோடு
தோணப்பாசுளுவுமெத்த வுலகத்தோர்க்குச்
சொன்னநூலிதுபோலச் சுருக்கமில்லை
நாணப்பாஅருணனேப்போற் செந்தூரங்கள்
நாட்டுகிறேன்வெகுலேசு நன்முய்க்கேளே. (5)

கேளப்பாதயிலங்கள் செந்தூரங்கள்
கெடியானசித்தருக்குஞ் சிவயோகிக்கும்
வாளப்பாவுலகத்திற் பண்டிதர்க்கும்
வழுத்தினேனிருநூற்றி யைந்தினுள்ளே
நாளப்பாசாத்தியமாம் ரோகந்தீர
நாட்டினேன்முந்நூற்றி லசாத்தியம்போக
வேளப்பாவிந்நூலே வைத்துக்கொண்டு
வேணபடிவயித்தியத்தைவிரும்பிச்செய்யே. (6)

செய்வதற்குவெகுசூட்சஞ் சொல்லிவிட்டேன்
ஜெகத்திலேபிழைப்பதற்கே யெளிதாமிந்நூல்
கைவசத்தில்வந்தமுதற் சிலவுமில்லைக்
கண்டுமெற்றப்பெரியோர்க்குமெளியோர்க்குந்தான்
மெய்யிலுள்ளவினைகளெல்லா நீங்கிப்போகும்
வீண்சாஸ்திரம்பார்த்தவர்கள்மயங்கிப்போவார்
நெய்மிகுந்தபால்போலே செந்தூரங்கள்
நிகழ்த்துகிறேனிசமாகப் பர்ப்பந்தானே. (7)

பர்ப்பகாண்டம்.

பர்ப்பமாகின்றவகை யதனைக்கேளும்
பாடினேன்பலநூலின் காரசாரஞ்
செப்புகிறேன்மூலிகையி னீறிற்றூளல்
சீடனுக்குமனத்தெளிவுதானுண்டாகும்
எப்போதுமூண்டுவரப் பயமேயில்லை
யிந்நூலேயெளிதாக வியம்பவேண்டாம்
நூற்பவகையென்னூலிற் தப்பாதப்பா
நுணுக்கமாய்ச்செய்தொழிலி னுண்மைபாரே. (8)

அயபர்ப்பம்.

நுண்மைபெற அயத்தகடு நெற்கனந்தான்
நுணுக்கமாய்ச்சாணகலஞ் சாண்தா நீளம்
வண்மையாய்வீழிவேர் பலந்தானென்று
வாட்டியேமெழுகுபோ லரைத்துப்பூசித்
தண்மையாய்யோட்டில்வைத்தே யோடுமூடிச்
சந்துவாய்சீலைசெய்து கெஜபுடத்தில்
உண்மையாய்வைத்திடவே பர்ப்பமாகும்
உயர்ந்ததிருநீறுபோற் காணுமென்னே. (9)

என்னவேயிதையெடுத்து வைத்துக்கொண்டு
யெலுமிச்சம்பழமதனை நான்காய்க்கீறி
அன்னவேபழம்பத்துச் சட்டியிட்டே
யதிலேதான்கையாஞ் சார்நாழிவாரு

பன்னவேகாடியதில் நாழிலிட்டுப்
பருவமா யவித்துலர்த்தி யெடுத்துக்கொண்டு
தின்னவேபணவிடைகள் கிறமுன்றில்தான்
தீருமடாபாண்டுவகை தீரும்நோயே. (10)

தீருநோய்குறைநோயுங் குட்டஞ்சூலை
தேனதனிற்கொண்டிடவே தீருந்தீரும்
பாருநோய்தீர்ப்பதர்க்குக் காந்தந்தன்னிற்
பர்ப்பத்தைச்சொல்லுகிறேன் பணிவாய்க்கேட்பாய்
ஆருமேசெய்வதற்குச் சிறியாநங்கை
யமரிவிட்டேஇடித்திந்த சாற்றைவார்த்து
நீருதான்வற்றவற்ற வறைத்துமூன்று
நிசமாகப்வில்லைசெய்து ரவியில்வைத்தே. (11)

வைத்தவில்லைகாய்ந்தபின்பு ஓடுமூடி
வளமாகச்சந்துவாய்ச் சீலைசெய்து
கைத்தபில்லைகெஜபுடத்தில் னீறிப்போகுங்
காந்தத்தின்பெருமைதனைக் காட்டொண்ணாது
சுத்தகிராணியொடு சோகைதீரச்
சொல்லுவோமாதளங்காய்ச் சாறுவார்த்து
கத்தனுடசுக்குதனை யரைத்துக்கிண்டிக்
காந்தபர்ப்பம் பணவிடைதானதனிற்கொள்ளே (12)

கொள்ளவேமண்டலத்திற் றீரும்பாண்டு
கொடிதானஜலக்கழிச்சல் பிறமேகங்கள்
தள்ளவே நீர்க்கிரிச்சிக் கரும்பானங்கேள்
சஞ்சீவிசூரணத்தாற் சாந்தமாகும்
உள்ளபடிமூலமொடு கிராணிக்கெல்லா
முலோகபர்ப்பங்காந்தபர்ப்ப மிரண்டுங்கூட்டி
வள்ளலேகாந்தாரி சூரணத்தில்
வைத்திடவேதீரும்நோய் மகிழ்ந்துகேளே. (13)

தாம்பரச்சேந்தூரம்.

கேளப்பாதாம்பரத்தின் தூட்டுவாங்கிக்
கிருபையுடன் நெற்சனமாய்த்தகடுதட்டி
வேளப்பாவாடுதொடா மூலிவேரும்
வெண்ணெச்சிவேரிரண்டுஞ்சமனுப்சேர்த்து

நாளப்பாளருக்கின்பா லதனுலாட்டி
நலமாகத்தகட்டின்மே லப்பிப்பின் னுஞ்
சூளப்பாவோட்டில்வைத்தே யோடுமூடிச்
சுகமாகச்சந்துவாய்ச் சீலைசெய்யே. (14)

சீலையதுமூன்றுசெய்து கெஜபுடத்திற்
சேர்த்திடவேயருணன்போற் செந்தூரந்தான்
ஆலையாகுன்மமெட்டுந் தீரவேண்டி
யஷ்டசூரணத்துடனே தேனுங்கூட்டிக்
காலையொடுமாலையிலுங் கொள்வீராகிற்
காணுதவாயுவர்க்க மெல்லாம்போகுஞ்
சூலையென்றகுன்மவகை தீரவேண்டி
சுருக்காகரசபர்ப்பஞ் சொல்கிறேனே. (15)

இரசபர்ப்பம்.

சொல்லுகிறேன்ரசநீ தன்னைச்சுத்திசெய்து
சுகமாகச்சிவகரந்தைச் சார்வீட்டாட்டி
அல்லுறேன்மூன்று நாளரைத்தபின்பு
யடைபோலப்பிடித் ததனையுலரவைத்து
மல்கிறேனோட்டினில் வைத்தோடுமூடி
வளமாகச்சந்து வாய்சீலைசெய்து
பல்கிறேன்குக்குடத்தில் மாண்டுபோகும்
பணவிடையிற் சூலைபதி னெட்டும்போமே (16)

பதினெட்டுக்குஷ்ட மரையாப்புக்கிரந்தி
பரங்கிக்குப்பணவிடையிற் பனைவெல்லத்தில்
மெதிரிட்டனுப்சயங்க ளெல்லாத்திரு
மீறைந்துநாட்கொள்ளு மிருநேரந்தான்
சதிரிட்டமேகவகை தீரவேண்டிச்
சாற்றுகிறேன்வங்கபற்பஞ் சார்ந்துநீகேள்
அதிரிட்டவெள்ளீயக்கட்டிவாங்கி
யப்பனேநெற்கனமா யடித்துக்கொள்ளே. (17)

வெள்ளீயபர்ப்பம்.

அடித்திட்டதகடதுவோ பலந்தானென்று
யாடுதொடாமூலிவேர் பலந்தானென்றே
துடித்திட்டவெண்தோன்றிக் கிழங்குமொன்றே
சுகமாகவரைத்ததனைமேலேயப்பி

வெடித்திட்ட வோட்டில்வைத்தேயோ டுமூடி
வெண்மையாய்கெஜபுடத்தில் வெளுத்துநீரும்
வடித்திட்டமேக வகையிருபதுக்கும்
வைத்திடவேபணவிடைதான்மருவிக்கொள்ளே (18)

மருவியதோராவரைப்பஞ்சாங்கம்வாங்கி
மைந்தனேதேன் விட்டுரத்தித்தேதான்
இருபோழுதுகொண்டிடவே நீர்ச்சுரப்பு
மியல்பான கல்லடைப்புக்கிரிச்சினங்கள்
அருவியென்ற தசையடைப்புபிறமேகங்கள்
ளணுப்பானமறித்துசெய்தால கன்றுபோகுங்
கருவியென்ற காரீயப்பர்ப்பங்கேளு
கருதரிய நொச்சியிலகவசமாக்கே. (19)

காரீயபர்ப்பம்.

ஆக்கியதோர்வெள்ளீய பர்ப்பம்போலே
யழகாகப்புடம் போடவெத்துநீறுந்
தூக்கியதோர்சூலையொடு குட்டநீரும்
சுனைப்புள்ளக் கிரந்திபிறமேகந்தீருந்
தேக்கிடதோர் திரேகத்தின்காத்தல்தீருஞ்
சீரற்றநீர்க்கடுப்புவரகஷிதீரும்
பாக்கியமாந்தேகத்தி லூஷ்ணமெல்லாம்
பறக்குமடா காரீயப் பர்ப்பத்தாலே. (20)

வெண்கலபற்பம்.

பர்ப்பமாம் வெண்கலத்தைச் சொல்லக்கேளு
பசுவாயிலை தனையரைத்துக் கவசஞ்செய்து
அர்ப்பமாயெண்ணுதே யோட்டில்வைத்தே
யழகாகக் கெஜபுடந்தான்பெரிதாய்ப்போடு
நூர்ப்பமாய் நீறியது வெள்ளையாகும்
நுணுக்கமடா பணவிடை நெய்தேனிற்கூட்டி
உர்ப்பனமாய்க் கொண்டிட வேசூலைபோகும்
உறப்பானவரய்வுகுன்மம் தீரும்பாரே. (21)

தீருமேஜயரோக மிருமல் மாந்தை
சிவசிவா சொல்லவன் வெண்கலத்தினேர்மை
ஊருதனிலிருப்போருக் கிந்நூற்கிட்டில்
யோகவான் வயித்தியத்துக்காதியாகும்
யாருமேயிம் முறையையறிந்து செய்தால்
பர்ப்பத்தினிளமை யெல்லாங்காணலாகும்
ஆருமேசெய்வதற்கே தறிந்துசொன்னேன்
அந்தந்த நூற்றேடியலையவதென்னே. (22)

தீராப்பர்ப்பம்.

அலையாமலின்னமொரு சேதிகேட்பா
யாச்சரிந்தி ராவினிடவதிசயந்தான்
இலையான தும்பையிலையதனைப் பூசி
யிட்டுவிடு கெஜபுடமே யோட்டில்வைத்து
நிலையான திராத்தகடு நீறிப்பொகும்
நீர்க்கிரிச் சிவண்டுகடி சிலவிஷங்கள்
குலையானகுன்மங்கள் ஜயரோகங்கள்
குஷ்டமொடுசூல பதினெட்டும்போமே. (23)

பித்தஜப்பர்ப்பம்.

எட்டாதநிலவாகைச் சூரணத்தி
லினித்தேன்சேர்த் தொருநாளே யிருநேரத்தான்
முட்டாமற்பத்துதினங்கொள்வீராகில்
மோசமில்லை நோய்களெல்லா முறிந்துநீங்கும்
கட்டாதபித்தஜயின் பர்ப்பங்கேளு
காஞ்சொரியின் வேரைத்துக் கனமாய்ப்பூசி
வட்டான வோட்டில்வைத் தேயோடுமூடி
வைத்திடுவாய்க் கெஜபுடத்தில் மாண்டுபோமே.(24)

மாண்டுபோம்நோய்கடனைச் சொல்லக்கேளு
வாய்வோடு குன்மமுதல் கிராணிமூலம்
பாண்டோடு நீர்ச்சுரப்பு வாய்நீரூறல்
பாய்கின்றகுடல் வாய்வுபார்சவாய்வு

ஆண்டதொருவானந்த வாய்வுக்குத்தான்
வருப்பான மறிந்துசெய்தால் நோய்கள்தீரும்
பூண்டநல்ல வொழுகறையைச் சொல்லக்கேளு
புகழானபர்ப்பமொன்று புகலுவேனே (25)

ஒழுகறைபர்ப்பம்.

புகலுவேன்கஸ்தூரியரைத் தேயப்பிப்
போட்டிடவே கெஜபுடத்திற் பொருமிநீறும்
ஜெகதலங்கள் மெச்சுமடா வித்தநீறு
தேசத்திற் பண்டிதர்க்குக் கிட்டுமோசொல்
அகலாதபாண்டோடு வீக்கஞ்சோகை
யப்பனேமகோதர நீ ராம்பலோடே
இகலாதநோயதனுக்க னுப்பானங்கேள்
இட்டிடுவாயிஞ் சித்தேனிரண்டிலுலே (26)

பால்கருடக்கல் பர்ப்பம்.

நாலானநாள்தனிலே வாங்கிப்போகும்
நரைதிரையுமில்லையடா நமனும்வாரான்
சோலாகச் சொல்லவில்லை பர்ப்பஞ்செய்யத்
தொழிலாளிநீயானற் செய்துபாரு
பாலான கருடக்கல்நீற்றக் கேளு
பவிசுகெட்டபண்டிதனே நீற்றப்போருன்
நூலானநூற்களெல்லாம் பார்த்தாலென்ன
நுணுக்கமாயிந்நூலே நோக்குவாயே (27)

வாய்நாலேபேசுவான் வயித்தியஞ்செய்ய
மகாபற்ப வகையொன்று மறியமாட்டான்
பேய்போன்ற வுலகத்திற்பிணியைத்தீர்க்க
பெருநூற்கு குருநூலாமிந்தநூலு
ஆயானவானைப்புல்கிழங்கரைத்தே
யப்பிவிடுகெஜபுடத்தில் நிறிப்போகும்
நோயான வுஷ்ணரோகங்களெல்லாம்
நுகரவேயிருதேரம் வெண்ணையாமே. (28)

வெண்ணெயிலேதானருந்த கனரோகம்போம்
மெய்யெல் லாங்குளிர்ச்சிதருந் தெளிவுண்டாகும்
எண்ணெயிலே தானருந்தக்கடுப்புதீரும்
யெலும்புருக்கியுள் வரட்சிபேகுமேகும்
மூண்ணவே யஸ்தியுடசுரமுந்தீரும்
முள்ளுருக்கியுள்ரோக முலர்த்தல் போகும்
பண்ணவேபால்கருடப் பர்ப்பத்தாலே
பறக்குமடா வெட்டையெல்லாம்பாருபாரே (29)

கல்நாருபற்பம்.

பாப்பதற்குக் கல்நாரின் பற்பங்கேளு
பகருகிறேன் கோங்கிலவம் பட்டைவாங்கி
ஆர்க்கவேயிடித்ததனை வைத்தேயோட்டில்
லதன்மேலே கன்னுரை நடுவேவைத்து
வேர்ப்பொழியும் பட்டைபொடி மேலேபோட்டு
மேலோடுமூடியல்லோ சீலைசெய்து
மூர்க்கமாங் கெஜபுடத்திற் போடநீறும்
மூதண்டகன்னுரின் முறையைக்கேளே, (30)

முறையானபர்ப்பத்தைத் தேனிற்கொள்ள
மூட்டோடேயசைந்தபல் லிறுகிப்போகும்
மறையான சேட்டுமத்தை யறுத்துப்போடும்
மகலாதவுஷ்ணத்தை யடக்கிப்போடும்
பிறையான நாளொன்றுக் கிருபோதுண்ணப்
பேரானசயமிருமல் சுவாசகாசம்
நிறையானமந்தார காசமேகும் (31)
நேரானதூதுளே லேகியத்திலென்னே

நாகபற்பம்

என்னவேநாகபற்பத் தியல்புகேளு
எலியாலின் பாலிலரைத்திடு கெஜந்தான்
பன்னவே ரவியுலர்த்திக் காய்ந்தபின்னப்
பரிவாகவோட்டில் வைத்துச்சீலைசெய்து

மூன்னமே சொன்னபடி புடத்தில்நீறும்
மூதண்டபர்ப்பத்தின் மூக்கியங்கேள்
வன்னமாங்கிராணியொடு மூலரோகம்
வயிறெரிவுநெஞ்செரிவு வாய்வும்போமே (32)

வாயுபோமிதற்குகெல்லா மனுப்பானங்கேள்
வரிசையுடன் திரிகடுகு திரிபலாதி
தூயதிலேலகிரிசஞ்சா பொடித்துச் சேர்த்து
தே ய்தேனிற்தூவிமெள்ளப் பதமாய்க்கிண்டு
நோயதனையறிந் துண்ணமண்டலந்தான்
நூற்பாகமுன்சொன்ன ரோகந்தீரும்
பாய்கின்ற வெள்ளியுட பர்ப்பங்கேளு
பாருற்ற ரூபாயை வாங்குவாயே (33)

வெள்ளி பற்பம்.

வாங்கியே செம்மூள்ளி யிலையரைத்து
மகிமையொடு கவசமதாய்ச் செய்துகொண்டு
தேங்கியே ரூபாபைக் குகையில்வைத்து
சில்லிட்டுச் சீலைசெய்து முழப்புடத்திற்
தேங்கியே யிட்டிடவே நீறிப்போகும்
திரமூள்ள வெள்ளியது பர்ப்பமாச்சு
ஓங்கியே சிமிளுக்குட் பதனஞ்செய்து
உயர்ந்தகுன்மம் நீர்கட்டுயெல்லாம்போமே (34)

நிர்க்கட்டுச் சதையடைப்பு மயக்கமோடு
நெஞ்சிலுள்ள கபமெல்லா நீங்கிப்போகும்
மூர்ச்செரியு மூச்செல்லா மடங்கிப்போகும்
மூக்கிலுள்ள நீர்ப்பாச்சற் பீனிசங்கள்
பார்மண்டை சூலையொடு புரைகள்புண்கள்
பதிங்கிவிடும் வெள்ளியுட மகத்துவந்தான்
ஆரிந்த பர்ப்பத்துக் கனுபானங்கேள்
ஆ ஆ ஆவ புக்கிராசு ரணந்தானுமே (35)

தங்க பற்பம்

ஆமிந்தத் தேனிலிடு மண்டலத்தான்
அகலாதநோய்க ளெல்லா மகன்றுபோகும்
ஓமிந்த தங்கபர்ப்பஞ் சொல்லக்கேளு
மூறுதியுள்ள தங்கக்கா சதனைவாங்கித்
தாமிந்தப் பனிதாங்கி மூலிதன்னைச்
சாந்துபோ லரைத்தப்பி யோட்டில்வைத்து
வாமிந்தச் சந்துவாய்ச் சீலைசெய்து
வைத்திடவே கெஜபுடத்திற் பர்ப்பமாச்சே (36)

ஆச்சிந்த பர்ப்பத்தை யெடுத்துக்கொண்டே
யளவிறந்த வித்தைதனை யாடலாகும்
பாச்சிந்த வகையறிந்து வேதைதன்னை
பாய்ச்சினு லேழரைதான் காணுங்காணும்
வாய்ச்சிந்தக் சொர்ணை பர்ப்பம்வியாதிக்கெல்லாம்
வகையறிந்தே யநுப்பான மறித்துகூட்டு
காச்சிந்த வநுப்பானஞ் சொல்லக்கேளு
கண்டாத்திரி லேகியத்திற் கொண்டிடாயே (37)

கொண்டாக்காற் சேட்டுமங்கள் தொண்ணூற்றுறங்
குடிபோமே மென்றுசொல்லி கூட்டோடேபோங்
கண்டாக்கால் சயரோகங் காஜரோகம்
கபமீளை யுண்மாந்தை கட்டோடேபோம்
உண்டாக்காற் றிரிகடுகு லேகியத்தில்
வுறவுகெட்ட குன்மமொடு மகோதரங்கள்
சென்றுக்கால் வாயுநீராம்பல் சூலை
சிரசுநோப் கண்ணெயுந் தீரும்பாரே. (38)

தீருமே குட்டமொடு குறைநோயெல்லாந்
திறமாக லேகியத்திற் கொண்டிட்டாக்கால்
பாருமே சூலையொடு கிரந்திகுஷ்டம்
பறக்குமே தேனிலிருபது நாளுண்டாற்
தேருமே நீரிழிவு பிறமேகந்தான்
றெளிவாக வீந்திற் சூரணத்திலுண்ண
வாருமே நெல்லிக்காய் லேகியத்தில்
வைத்துமெ கொண்டிடவே பித்தம்போமே. (39)

போகுமே சிவவேம்பின் சூரணத்திற்
புகட்டவே புண்புரைகள் சில்விஷங்கள்
ஆகுமே வண்டுகடி விடங்களெல்லா
மாச்சரியம் வேம்பின் சூரணத்திற்கொள்ள
ஏகுமேவாதமென்ற வெண்பதுந்தான்
யெடுத்ததொருநோய்களெல்லா மேங்கிப்போகும்
வாகுமேயனுப்பானம் அறிந்துசெய்தால்
வருகின்றநோய்தீருஞ் சொன்னமாமே. (40)

சொன்னமதுதின்றுக்காற் சொன்னம்போலாஞ்
சுகமாகவிரும்பு தின்றுலிரும்புபோலாம்
அற்பமாமன்னமுண்டா லழிந்துபோகும்
ஆசையதுமிகுந்தாக்கால் பிறவிதீரா
வர்னமது தீர்ந்தாக்கால் வலுமைபாழாம்
மாநிலத்தி லிருந்தாக்காற் றவசுபாழாம்
வர்னபொன்னே மறந்தாக்கா லென்னவாகும்
மாகாதிவ்வியமாகப் பொன்னீற்றுவாயே (41)

கெந்தக பற்பம்

நீற்றுதற்குப் பின்புமொரு சேதிகேளு
நேராகெந்கத்தின் பற்பஞ் சொல்வேன்
ஏற்றுகின்ற சிறுசின்னி தனையரைத்தே
யெலுமிச்சங் காயளவாய்க் குகையேசெய்து
தோற்றுகின்ற ரவியதனிற் காயப்போட்டுச்
சுகமாக வுலர்ந்தபின்பு சொல்லக்கேளு
சாற்றுகின்ற கெந்தகத்தின் கட்டிவாங்கித்
தளமான குகைக்குள்வைத்துச்சில்லுபோடே. (42)

சில்லிட்டுச் சீலைசெய்து குக்குடத்திற்
தீர்ந்தாறி யெடுத்துபார் ஜெயபற்ப்பந்தான்
மல்லிட்டு வாதாடி வந்தநோய்கள்
மயங்கியே போடுவதற் கநுபானங்கேள்
நெல்லிட்ட நெல்லிடைதான் தேனிற்கொள்ள
நீலயான குஷ்டமொடு குறைநோயெல்லாம்
பல்லிட்டுக் கடித்ததொரு சில்விஷங்கள்
பாரித்த வாய்வோடி வாதப்போமே. (43)

வாதத்தி னுலெழுந்த கிரந்திசூலை
வயிற்றுவலி நீர்ப்பொருத்த மகோதரங்கள்
சூதத்தால் வந்ததொரு கற்பரோகஞ்
சுழற்றியே யாற்றிவிடுங் கண்டாற்போலே
பாதத்தில் வீக்கமுள்ள பாண்டுரோகம்
பறக்குமப்பா பற்பத்தாற் பாருபாரு
தாதுற்ற விடுப்புவலி சந்துவாதந்
தசையிலுள்ள நீரெல்லா மற்றுப்போமே. (44)

மண்டூரபற்பம்.

அத்தொரு மண்டூரபற்பஞ் சொல்வேன்
அதிகமாஞ் சொரிசுணங்கை யரைத்துப்பூசி
வைத்திடவே மண்குகையில் சில்லுப்போட்டு
வளமாக சீலையொன்று வாயில்செய்து
பத்தியுடன் ஜெகபுடத்திற் கூகைநீரின்
பரிவதுபோல் கண்மணியே நீறிப்போகும்
புத்தியுட னிதையெடுத்து வைத்துக்கொண்டு
புனிதமாய்த் தேனதிலே பொசித்துபாரே (45)

பொசித்திடவே பணவிடைதான் றேனிற்கொள்ளப்
பொருமுகின்ற பாண்டுவகை பொல்லாவீக்கம்
நசித்திடவே பண்ணுவிக்கு மண்டூரந்தான்
நாடாது மந்தார காசரோகம்
முசித்திட்ட விஷப்பாகம் விஷநீரெல்லாம்
மூட்டோடே பிடுங்கிவிடு மூர்க்கமெத்த
உசித்திட்ட வஞ்சனக்கல் பற்பஞ்சொல்வே
னொருபிடியாஞ் சிறுகீரை குகையைப்பண்ணே.(46)

அஞ்சனக்கல் பற்பம்.

பண்ணியந்த வஞ்சனக்கல் நிறையவிட்டுப்
பரிவான மூலிகையை யரைத்துமூடி
ஒண்ணியமண் சீலைசெய்து கெஜபுடத்தி
லுறுதியுள்ள சங்குபோல் நீறிப்போகுந்

தண்ணியிலே போட்டவுடன் மிதக்கும்பாரு
ஜலமான மேகவகை யிருபதுக்கும்
எண்ணியே தேனிலிடு வியாதியாலும்
யென்ன சொல்வேன் நீர்போன போக்குத்தானே.

தாளக பற்ப்பம்.

போக்கான தாளகத்தி லிற்றைச்சொல்வேன்
புதியதலை யோடதனைப் பொடித்துக்கொண்டு
நிக்கான சுண்ணும்புத் தண்ணீர்விட்டு
நினைவாகந் தானரைத்துக் குகைபோற்பண்ணி
வாக்கான மேல்மூடி யொன்றுசெய்து
வண்மையாய் காயவைத்தே யதனுட்கேளு
பாக்கான தாளகத்தின் கட்டிவைத்துப்
பரிவாகச் சீலமண் செய்துலர்த்தே (48)

உலர்ந்தபின்பு குக்குடத்தி லீரிப்போகும்
வுத்தமனே தாளகத்துக் கொப்புமுண்டோ
மலர்ந்ததொரு மல்லிகைப்பூ போலாம்வெள்ளை
மாசற்ற நீரதனை வைத்துக்கொண்டே
அலர்ந்தமலர்த் தேனதிலேகொள்வீராகில்
அரிதான சயரோக மந்தாரங்கள்
கலந்தகப முள்மாத்தை யிருமலீளை
கரைகடந்தே யோடிப்போங்கண்டுகொள்ளே. (49)

கண்டுகொண்டே யநுப்பான மறிந்துசெய்தாற்
காணுதகடிவிஷமுங் குறைநோய்குஷ்டம்
வண்டுகடி யெலிவிஷங்க லெல்லாந்தீரும்
மைந்தனே யநுப்பான மறிந்துபோடு
பண்டான ஜாதிலிங்கந் தன்னைநாளும்
பற்பமாய் நீறுகிர பண்பைப்பாரு
எண்டிசையி லுள்ளவரா னீற்றபோமோ
யெவருமெய்க்க பற்பமதைச்செய்பக்கேளே (50)

ஜாதிலிங்க பற்பம்

செய்யதொரு ஜாதிலிங்கக் கட்டிவாங்கிச்
சிவமூலி வேர்பட்டைக் குகைபைச்செய்து
வெய்யதொரு கட்டியதில் வைத்துமூடி
விதமூடனே சந்துவாய்ச்சீலைசெய்து
பையவே குக்குடத்தி னீறிப்போகும்
பரிவுடனேநிறுத்துப்பா ரிடைதான்போகா
துய்யவே நோயெல்லாந் தீரவென்றுற்
றுரையான வநுப்பான மொன்றுகேளே. (51)

வே று.

ஒன்றுதான் சேனிற்கொள்ள
வுறுதியாங்குன்மவாய்வு
பண்டுள்ளஜன்னிவாதம்
பாரிசவாய்வுசூல
ஏன்றிடு மீளைதன்னை
டிளைப்பதும் விரைந்துபோகும்
உண்டிடு மனுப்பானங்கள்
வுகந்துமே கண்டிடாயே (52)

வீரபற்பம்.

உகந்திடும் வீரபற்பம்
வுரைக்கிறே னுறுதியாக
ஜெகந்தனி லப்பையின்றன்
கிழங்கினைக் குகைபோர்செய்தே
இகந்தனில் வீரந்தன்னை
யிசையவே யதனுல்வைத்துப்
பகர்ந்திடுஞ் சில்லுமூடிப்
பாகமாய்சீலை செய்யே. (53)

செய்யவேகுக்குடத்தில்
தீர்க்கமாய் நீறிப்போகும்
மெய்யது பனவிடைதான்
மியல்புடன் றேனிற்கொள்ள

மையது சூலகுன்மம்
மகன்றிடும் வாய்வுபோகும்
மெய்யிது சொன்னேன்காரப்
போக்கினே விரைந்துகேளே. (54)

பொரிக்காரப்பற்பம்.

விரைந்திடும்பொரிக்காரத்தின்
கட்டியை விதித்துவாங்கி
உரைந்திடுஞ் சங்கைநீற்றி
யுகந்துநீர்விட்டரைத்து
நிறைந்திடுங் குகையாய்பண்ணி
நேர்பொரிக் காரம் வைத்துக்
குறைந்திடுஞ் சீலைசெய்து
குக்கிடம்வைத்திடாயே. (55)

வைத்திடக் காரம்நீறும்
வளமிதற் கனுப்பானங்கேள்
நித்தமுந் தேனிற்கொள்ள
நீர்க்கடுப்புடனேமாறும்
மெத்தன ஜலமிரங்கும்
மிசைந்த கல்லடைப்புந்தீரும்
அத்திடுஞ் சதையடைப்புத்
துறந்துநீர்த் தோஷம்போமே (56)

சாஸ்திரபேதிபற்பம்.

போமென சாஸ்திரபேதி
புகல்கிறேன் புனிதமாக
வாமெனமூலைப்பால்விட்டே
யவ்விடை யெருக்கம்பாலால்
ஆமென நாலுஜாமம்
மதித்தரைத் துண்டைசெய்து
நாமென குக்குடத்தில்
நாட்டிட நல்லநீறே. (57)

நல்லதோ ரந்நீர்தன்னை
நாட்டுவா யிஞ்சிச்சாற்றில்
வல்லதோர் சுரமுந்தீரும்
மருவிய பாலிற்கொள்ள
மெல்லவே வருஞ்சுரங்கள்
விலகியே பின்னும் போகும்
அல்லதோருஷ்ண மெல்லாம்
அலரிடும் வெண்மைதானே. (58)

வெண்குந்திரிக்க பற்பம்.

வெண்மை குந்திரிக்கம்நீற்றை
விளம்புவேன் விரைந்துகேளு
பண்ணியின் பாலைவிட்டு
பரிந்தரைத் துண்டைசெய்தே
அண்ணலேயோட்டில் வைத்து
யதின்மேலே யோடுமூடி
மண்ணதுசீலை சுற்றி
வைப்பாய் குக்கிடத்திற்றானே. (59)

குக்கிடந் தன்னிற்றானே
கூகைநீ ரெருப்பதாகும்
மிக்கநீறதனை வெண்ணெய்
தன்னிலே யருந்துவீரேல்
தக்கபற்கடுப்பு ரத்தந்
தான துபறந்து போகுஞ்
சிக்குள்ள புண்ணுந்தீருஞ்
சிந்தையி லெண்ணிப்போடே. (60)

போடவே பல்லுனைவும்
புண்ணெனு மனைத்தினைவுஞ்
சூடது கொண்ட புண்ணுஞ்
சூலையின் ரணங்கள்போகும்

ஆடிடுந்தந்த மெல்லாம்
ஆணிபோ லுறுத்து நிற்குஞ்
சேடுவெண் குந்திரிக்கஞ்
செய்திடுந் திறங்கடானே. (61)

பவழபற்பம்.

நிறந்திடும் பவழபற்பம்
செய்கிற திறந்தான்கேளு
சிறந்ததோர் மூயலின் ரத்தந்
தீர்க்கமாய் விட்டேயாட்டிக்
குறைத்திடா வில்லைசெய்து
குலாவியே யோட்டில் வைத்து
மறைத்திட வோடுமூடி
வைப்பாய் குக்குடத்திற்றனே. (62)

தானதுநீறி வெள்ளைச்
சதுர்முகன் போலேயாகும்
பானதோர் நீறதன்னைப்
பணவிடை யநுப்பானங்கேள்
தோனமாந் தேனிலெடு
தூதுளை நீரிற் கொள்ள
மானமாங் கபங்களீல
சயங்களு மகன்றுபோமே. (63)

அகன்றிடு மிருமற்காச
மதிகமாம் பவழபற்பம்
புகன்றிடப் போகுமப்பா
புனிதமா மிந்தநீற்றைச்
செகத்தனிற் செய்யமாட்டார்
செப்பினே னுலகத்தோர்க்கு
நிகண்டதுபோலாம் நூலை
நுணுக்கமாய் நிரம்பத்தினேனே. (64)

நிகழ்த்தினே நுணுக்கமாக
நினைவொடு பவழபற்பஞ்
செகத்தினி லாருங்காணர்
செப்பினேன் சூட்சமாக
அகத்தினி லிருந்துகொண்டே
யாடலாங் கோடிவித்தை
மகத்துவ மின்னூல்போல
வைத்தியங் கண்டிலேனே. (65)

வைரபற்பம்.

கண்டதோர் வைரந்தன்னைக்
கருத்துட னுரைக்கக்கேளு
பெண்களின் சுரோணிதத்தைப்
பேணிவார்த் தரைத்துவில்லை
நன்றதாய்ச் செய்துலர்த்தி
நாடியே யோட்டின்மூடி
சென்றிடக் கெஜபுடத்தில்
தீர்க்கமாய் பற்பமாமே. (66)

நீறியபற்பந்தன்னை
நினைவதாய் தேனிற்கொள்ள
ஊறிடுந்தேக மெல்லா
முத்ததோர் வைரம்போலாம்
மாறிடு மேனியெங்கும்
வச்சிர காயமாகுங்
கூறிடும் ரத்நமெல்லாங்
கட்டியாய் நீற்றக்கேளே. (67)

இரத்நபற்பம்.

கேளது பவழப்புத்தை
களர்முன்போல ரைத்துக் கொண்டே
ஆளது குகையரய்ப் பண்ணி
யதினுள்ளே வைரம் வைத்துச்

சூளதுசில்லு போட்டுச்
சுற்றியே சீலைகட்டி
நாளது குக்குகுடத்தி
நாட்டிட பற்பமாமே. (68)

போமது பற்பமானுல்
புவியினிற் காட்டவொண்ணு
ஆமதி ரத்னபற்பம்
அதிகமாய்ச் சித்தர் செய்வார்
நாமதுதிறந்து சொன்னேம்
நாட்டினில் மனுவோர்க்காக
ஆமிதுக் கநுப்பானங்க
ளறிந்திட வுறுதியாமே. (69)

உறுதியா மிந்தநீற்ரு
லொழிந்திடும் வியாதியெல்லாம்
அறுதியாம் பாஷாணத்தி
னீரதை யறையக்கேளு
சுருதியா மண்டத்தோட்டைச்
சுண்ணமா யூதிக்கொண்டு
கருதியே குகையாய்ச்செய்து
கட்டியைப் பேணிவையே, (70)

பாஷாணபற்பம்

பேணியே வைத்தபின்பு
வெள்ளெறுக் கதனின்பாலே
ஆணியாம் பாலேவிட்டே
யதின்மேலே சில்லுப்போட்டுப்
பூணியே சீலைசெய்து
குக்குடம் புடமதாக
வாணியே யிடுவாயானுல்
மாசற்ற பற்பமாமே. (71)

பற்பத்தி னிடையே சூதம்
பாச்சியே மூலைப்பால் வீட்டு
நற்புட னரைத்துப்பில்லை
ஞபம்பட வுலர்த்திக்கொண்டே
உற்பன வோட்டில் வைத்தே
யுபாயமாய்ச் சீலைசெய்து
கற்பகக் களிற்றைப்போற்றிக்
குக்குடங் கருதிக்கொள்ளே, (72)

கொள்வது நீற்றைநன்றாய்க்
கூறுவேன் வெள்ளீயத்தில்
விள்வது பதந்தனக்குப்
பணவிடை வீதமாக
உள்வது உருகும்போது
கொடுத்திட வுரித்துகொள்ளும்
மெள்வது துய்யரூபாய்
விலையதற் கதிகந்தானே (73)

தானென சுரத்துக்கெல்லாம்
பாலினிற் றூக்கினுக்கால்
கூனென நாழிகைக்குள்
குளிர்சுர மோடிப்போகும்
நானென வித்தநீற்றை
நாட்டினி லுரைக்கொணாது
பானென தெளிந்தநூலைப்
பத்திரப் படுத்திவையே. (74)

சாரபற்பம்.

வைத்திடுஞ் சாரநீற்றை
மைந்தனே மகிழ்ந்துகேளாய்
எத்திடும் புளியஞ்சாம்பல்
யெடுத்ததை யுப்பாய்க்காச்சி
சத்திடுங் குப்பைமேனிச்
சாறுவிட் டரைத்துநன்றாய்
அத்திடும் குகையுண்டாக்கி
யதினுள்ளே வைத்துமூடே. (75)

மூடியு பதனற்செய்து
மூசியவே சீலகட்டி
யாடிடக் குக்குடத்தில்
அழகதாம் நீறும் பற்பம்
தேடினற் கிடையாதிந்தச்
செகந்தனிற் சாரபற்பம்
வாடிடும் வாதியேகேள்
வகையுட னீற்றுவாயே. (76)

வாயது பேசினுக்கால்
வாய்க்குமோ சார நீறு
நோயது கொண்டவாதி
சாரத்தினுணுக்கங்கேளு
காயது நாகந்தானுங்
கண்டிறந் தாடிச்சாகும்
பேயதுகொண்டவாதி
பேசாதே பேணிப்பாரே. (77)

பாருள்ள நோய்கள்தீரப்
பாய்ச்சிடு தேனிலேதான்
சிருள்ள மகோதரங்கள்
வாயுவின் றிரட்சியோடு
நீருள்ள வாம்பல் வீக்கம்
நிச்சயங் கற்பரோகம்
மூருள்ள குன்மமெல்லாம்
மோடிடு மூலகத்தோர்க்கே. (78)

உப்புப் பற்பம்

உலகத்தி லுப்பினீற்றை
யுரைக்கிறே னுறுதியாகச்
செலம்பெற்ற லவணந்தன்னைச்
சிவந்தவோர் கட்டிவாங்கி
மலைபெற்ற வன்னிப்பட்டை
யிடித்ததை மாவதாக்கி
நிலைபெற்ற வோட்டிலிட்டு
நேர்ந்துப்பை நடுவேவையே. (79)

வைத்ததோர் கட்டிமேலே
வன்னிதன் பட்டைத்தூளை
உத்ததோர் கீழ்மேலிட்டே
யோட்டின்மே லோடுமூடி
முத்தவே சீலைசெய்து
மூன்புடங் கோழியிட்டே
அத்தபின் னெடுத்துப்பார்க்க
வதிகமாம் பற்பமாமே. (80)

அதிகமாம் பற்பந்தன்னை
யருந்திடத் திசைவாய்வெல்லாம்
பதியைவிட் டோடிப்போகும்
பாரிச வாய்வுசூலை
கதிகெட்ட மகோதரங்கள்
கனத்திடு நீர்த்தோஷங்கள்
மதிகெட்டுக்கடலேபுக்கும்
மகிழ்வதற் கின்னமுண்டோ. (81)

உண்டென வுரைத்தசெய்தி
யுறுதியாய்ச் சொல்லக்கேண்மின்
அண்டர்கள் போலாமிந்த
வதிசயமுப்புநீறும்
தெண்டிசை முழுதும் வாழச்
செப்பினேன் பற்பந்தன்னை
கண்டிடவெள்ளிசெம்பிற்
களஞ்சதற் கொருமாவீயே (82)

ஈந்திட வயதைந்தாகு
மெடுத்திட வாணிக்கெல்லாம்
தேய்ந்திட வறுத்தாயானற்
றெளிந்திடுந் தங்கமாகுங்
காய்ந்திடுங் கசடருக்குக்
காட்டாம லிந்தநூலை
ஆய்ந்திடும் பெரியோர்கீய்ந்தா
லறம்வரு மதிகமாமே. (83)

ஆமையோட்டின் பற்பம்

ஆமையோ டதனை நீற்ற
வருடனைச் சொல்லக்கேளு
பூமிவேர் தனையரைத்துப்
பொருந்திடக் கவசஞ்செய்தே
ஆமிதை யதனுள்வைத்தே
யழகதாய்ச் சில்லுப்போட்டு
தாமுமே குக்குடத்திற்
றூக்கிடத் தவளநீறே. (84)

தவளமாய் நீற்றலான
சகஸ்திர பிராணிபற்பம்
கவளமாய்த் தேனிலிட்டாற்
கண்கணைப்த் தொண்ணூற்றூறு
முவளமா யோடிப்போகு
மூசலகண் ரோகந்தீரும்
பவளமா மிந்ததபற்பம்
பாரினி லதிகந்தானே. (85)

முத்துப்பற்பம்

தானெனு மூத்துநீற்றைற்ச்
சாற்றுவேன் தரணியோர்க்கு
மானெனு மண்டநீரால்
மகிழ்ந்தரைத் துண்டைசெய்து
நானென வோட்டில்வைத்து
நாடியே சீலைமூடி
வானென குக்கிடத்தில்
வைத்திடச் சுண்ணமாமே (86)

சுண்ணமா மூத்துநீற்றை
சுகமாய்வெற்றிலையிற்பூசி
அன்னவே தாம்பூலத்தில்
அருந்திட வாய்வுபோகும்

முன்னமே பல்லிறுகுஞ்
சிலேற்பன முழுதுந்திரும்
வன்னமாந் தேகத்துக்கு
வாய்த்திடுஞ் சுண்ணமாமே (87)

வாய்த்திடும் பிறமேகங்கள்
வந்தநீ ரழிவுதீருஞ்
சாய்த்திடுங் கற்பூரத்தைச்
சாற்றுவேன் சுண்ணமாக்க
வாய்த்தசற் பூரவள்ளிச்
சாரது வார்த்தைத்துத்
தோய்த்திடும் வட்டதாக்கி
ரவியினிற் காயச்சொல்லே. (88)

சொல்லிய வட்டவோட்டில்
துலங்கவைத் தோடுமூடி
நல்லதோர் சீலைசெய்து
நாட்டியே புடந்தான்கோழி
எல்லியே யெடுத்துப்பார்த்தால்
லியல்புள்ளச் சுண்ணமாகும்
வல்லிவெற் றிலையிற்றின்னுல்
வச்சிரகாயமாமே. (89)

காயமும் வலுத்துப்போகுங்
கசடது மற்றுப்போகும்
வாயினில் ரோகந்திரும்
வருந்திய கபமுமேகும்
மாயமாம் வாய்வுபோகும்
மலசலக் கட்டுந்திரும்
நேயமாய்க் கீண்துலங்கும்
நிச்சய மிதுசொன்னனே (90)

துரிசுபற்பம்.

நிச்சய மாகச்சொல்வேன்
நீலமாந் துரிசுப்போக்கு
வைச்சதோர் வங்கத்தோடே
யிடைக்கிடை சூதம்வார்த்து
மெச்சுமந் திடைக்குநல்ல
வெடியுப்புங் கூடக்கூட்டி
உச்சவாய் நீரூலே
யுறவரைத் துலர்த்திவட்டாய். (91)

வட்டமா யோட்டில்வைத்து
வஸ்யவே சீலசேய்து
திட்டமாய்க் குக்குடந்தான்
றீர்ந்திடச் சுண்ணமாகும்
முட்டவே சிவந்துபோலல்
முறைப்படி யுப்பைக்கூட்டிச்
சட்டமா யறைத்துமுன்போலப்
புடமிடச் சுண்ணமாமே. (92)

சுண்ணத்தை வாய்நீராலே
சுழற்றியே யறைத்துக்கொண்டே
அன்னத்தை துரிசுக்கட்டிக்
அப்பியே ரவியிற்போட
முன்னெத்த மூன்றுநாளில்
முழுவெளஸ்யாகும்பாரு
பொன்னெத்த சீலசெய்து
போட்டிடு காடையொன்றே. (93)

ஒன்றிதை யொத்துப்பார்க்க
வியலுள்ளச் சுண்ணமாகுங்
கண்களாற் கண்டபேர்க்குங்
கலியெலா நீங்கிப்போகும்

பண்டிதை பசத்திற்குக்கால்
பணவிடை தாக்கினுக்கால்
உண்டது கொண்டுபோமோ
யுறுதியாம் வாய்நீராலே (94)

வாயினி லுமிநீராலே
மத்தித்தே யுருட்டிமெள்ள
காயினி லுமியோட்டுள்ளே
கரியினி லுருக்கிக்கொண்டு
வாயினி லாயிபாதந்
தன்னையே வணங்கிநித்தங்
காயினி லிதனைக்கொண்டே
யாடலாங் கோடிகாணே. (95)

கோடியென் றுரைத்தேன்கேளாய்
கோடியு மிதற்குள்ளாகும்
வாடியே மயங்கவேண்டாம்
வைத்திடு துரிசுச் சுண்ணந்
தேடினுற் கிடையாதப்பா
தெருவேல்லாங் கிடைச்குமோசொல்
பாடியும் படித்துமென்ன
பாரினிற் னூற்கிட்டாதே. (96)

கிட்டாமற் போனதேதோ
கிடைத்தவர் கொடுக்கமாட்டார்
நட்டாகத் தந்தபேர்கள்
நரகினில் விழுந்துபோவார்
செட்டாக விருப்பாரானால்
திரவியமிகவுஞ் சேரும்
மூட்டாளாய்ப் போகாமற்றான்
முறையதாய்க் குருவைவாங்கு. (97)

பொன்னி மீளபற்பம்.

வாங்கும்பொன் னிமீளபற்பம்
வளமதாய்ச் சொல்லக்கேளு
கோங்கிய வரசன்பட்டை
தூளதா யிடித்துக்கொண்டு
காங்கிசை கீழ்மேலிட்டுக்
கட்டியை நடுவேதூக்கி
ஓங்கியே யோட்டில்வைத்தே
யதன்மேலே யோடுமூடே. (98)

மூடியே சீலைசெய்து
மூக்கியமாய் கெஜபுடத்திற்
சாடியே நீறிப்போகுந்
தவளம்போல் வெண்மையாகுங்
கூடிய வாய்புரோகங்
குலைகுலைந் தோடிப்போகும்
நீடிய குன்மமெட்டும்
நிலைகுலைந் தேகுங்காணே. (99)

காணவே சூலைக்கட்டு
கண்டவிப் புருதிமாலை
ஊணரை யாப்புபுத்துக்
ஒகோநெய் தேனிற்கொள்ளு
தோணவே தங்கநீறைச்
சுளுவாக வொன்றுசொல்வென்
நாணவே சூரிவித்தை
நாவினி லுமிநீராலெ. (100)

தங்கபற்பம்

நீரினு லரைத்துத்தங்கக்
காசுமே நிருத்தியோட்டில்
தாரியே வைத்துமூடிச்
சந்துவாய் சீலைசெய்தே

ஊரினுற் கெஜபுடத்தி
வுபர்த்தியாய் நீரிப்போகும்
பேரினு லிந்தநீற்றை
பேசொணு தரிந்தபேர்க்கே. (101)

பேர்க்கென்ற வகையேது சொல்லக்கேளு
பெயர்கெட்ட வுலகுக்குப் பொருளேகாணும்
மாக்கென்ற தங்கபற்ப மொருமாவாக
வப்பனே ரவிமதியி லீந்தாயானல்
ஊக்கென்ற விராகனுக்கே யதிகங்காணும்
வுறப்புள்ள தங்கமடா யிந்தப்போக்கு
நாக்கென்ற சரசோதி நிருத்தஞ்செய்வாள்
நாதாக்கள் செய்கின்ற வித்தைதானே. (102)

வித்தையென்ற வித்தையெல்லா மிருநூற்றுள்ளே
விருதுகட்டி வெட்டுதற்குச் சுளிவுமெத்த
சுத்தென்ற சுத்தெல்லாம் விட்டுப்போட்டுச்
சுளுவான வித்தைதனை யாடித்தேறு
பத்தென்ற நூறுமது முடிந்தவாறைப்
பாடினே னின்னமொரு நூறும்பாரு
முத்தென்ற முத்துபோல் மூலிப்போக்கு
முக்கியமா யோதுகிறேன் முறையைப்பாரே (103)

முறையான ஏகமூ லிகையினுலே
முக்கியமா யெண்ணெயொடு நெய்க்கியாழந்
துறையான துறையெல்லா மிதற்குட்சொன்னேன்
சுளுவாகத் தைலங்கள் சூரணங்கள்
பறையென்ற பறைபோட்டேன் வியாதிக்கெல்லாம்
பண்பதுபோற் புலக்கிவிட்டேன் பலநூலுள்ளே
நிறையான துறையெல்லா மிதிலேசொன்னேன்
நிச்சயமாய் நூற்றுக்கு ணிகர்காணேனே (104)

தைலக் காண்டம்.

மேகத்துக்குத் தைலம்

நிகரில்லா மேகத்தின் தைலங்கேளு
நிசமான சந்தனமு மிலாமிச்சோடு
வகையாக வாவிரையின் பட்டைதானும்
வளமாகப் பலம்பத்து நிறுத்துத்தூக்கிப்
புகையாமற் றூணிநீ ரெட்டொன்றுக்கிப்
புகழ்பெறவே கியாழத்தை யிறுத்துக்கொண்டு
நகையாமல் யெள்ளெண்ணெய் நாழிவிட்டு
நரிகிண்டி வேர்பலந்தா னரைத்துப்போடே- (105)

போட்டதனைக் காய்ச்சியே மெழுகதாஞற்
புண்ணியனே வடித்திட்டுப் புகலக்கேளு
நாட்டினிலே முழுகிவர மேகந்தீரும்
நளினமாந் திரேகமுமே யிருகிப்போகும்
பூட்டென்ற மேகநீர் போகவேண்டிப்
புனிதமா மருந்தொன்று சொல்வேன்மைந்தா
சாட்டதனை மூன்சொன்ன பற்பந்தன்னிற்
சாற்வாக கொடுத்துவிடு சாந்தமாமே. (106)

வில்வவேர்த் தைலம்.

சாந்தமாம் வில்வவேர் தைலங்கேளு
தானுன வில்வவேர் பலந்தான்பத்து
பாந்தமா யிடித்ததனைப் பதக்கு நீரிற்
பக்குவமாய்க் காய்ச்சியேயெட்டொன்றுக்கிப்
போந்தெண்ணெய் நாழியிலே பலந்தான்தந்தம்
புகழாகக் கியாழந் திரைத்துட்போட்டுச்
சேர்ந்ததோர் தைலமது மெழுகதாஞற்
சிறப்பாக முழுகிவர வளமைகேளே (107)

வளமையுடன் முழுகிவரப் பித்தம்போகும்
வரிசைபெற்ற மெய்யிலுள்ள உஷ்ணமேகும்
மிளமைபெற வாக்கிவைக்கு மேகம்போகு
மிருகண்ணுந் தெளிவுதரு மிருமல்தீரும்

உளமதனிற் பித்தமெல்லா மோடிப்போகும்
மூள்வரச்சி யுட்சுரங்க ளொழிந்துபோகுந்
தளமாகச் சூட்சமாந் தைலஞ்சொன்னேன்
தளராமற் பாருநீ தரணியோர்க்கே (108)

வேங்கைத் தைலம்.

தரணியுள்ள மானிடர்கள் பிழைக்கவேண்டிச்
சாற்றுகிறேன் வேங்கைய தைலந்தன்னைக்
கரணியமாய்ப் பலம்பத்துத் தூக்கிக்கொண்டு
காய்ச்சியிடு தூணிநீ ரெட்டொன்றுக
திரணியுள்ள கியாழத்தை வடித்துவாங்கித்
தறமான விலாமிச்சப் பலமொன்றுக
வரணியமாய்க் குடிதீரி லரைத்துப்போட்டு
வளமாக மெழுகுபத மானவாரே. (109)

வாருக மூழ்கிவர வகையைக்கேளு
வாதபொடி சூலைகளும் மாண்டுபோகும்
பேருகப் பித்தமெல்லாம் நடுங்கியோடும்
பீனிசமு மண்டையிடி பிரட்டற்சத்தி
வீருன விக்கல்மூத லுடனேபோகும்
மெய்யெல்லாங் காந்தியுண்டாம் விழிரோகம்போம்
தூருகும் பின்சொன்னத் தைலப்போக்கு
நுணுக்கமாம் பற்பத்தின் போக்குநூறே (110)

வெட்டிவேர்த் தைலம்.

போக்கான சேதியொன்று சொல்லக்கேளு
புகழான வெட்டிவேர் பலந்தான்பத்து
நோக்காக விடித்ததனைப் பதக்குநீரில்
நுணுக்கமாய்க் காய்ச்சியே யெட்டொன்றுக்கி
வாக்காக வடித்ததனி லெண்ணெய்நாழி
வளமையா யதிமதுரம் பலந்தானொன்று
தாக்கான யெண்ணெய்க்கு ளரைத்துப்போட்டுச்
சாதகமாய் மெழுகுபதந் தன்னில்வாங்கே. (111)

வாங்கியே முழுகிவர வரிசைகேளு
மானிலத்தில் மனிதர்கட்கு மண்டைச்சூலை
ஓங்கியே குஷ்டமொடு பிறநீர்க்கோர்வை
யொளிருருவுங் கண்புகைச்சற் காதுமந்தம்
ஏங்கியே யீளப்பீளப்பு மேற்கால்நோயும்
மியல்கெட்ட தாதுசய மெரித்தற்காந்தல்
நீங்கியே போவதற்கோர் மண்டலந்தான்
நேராக ஒன்றைவிட்டே ஒருநாளென்னே. (112)

வேப்பின்பட்டைதைலம்.

என்னவென்ற இன்னமொரு தைலங்கேளாய்
இனிதான வேம்பினுட பட்டைவாங்கி
உன்னவென்று கல்த்துலா மிடித்துக்கொண்டே
யோருறி நீர்தூதான் வார்த்துக்காய்ச்சி
சொன்னதென்ன மெட்டொன்று மிறுத்துமெள்ள
சுருதிபெற யெண்ணெயிரு நாழிவிட்டு
நன்னயமாய் யேலமதில் பலபிரண்டு
நலமான கியாழத்தி லரைத்துப்போடே. (113)

அரைத்துடனே காய்ச்சிவிடு மெழுகதாலுல்
ஆற்றியே வடித்ததனை முழுகும்போது
நிரைத்திட்ட வாதமெல்லா மேங்கியோடும்
நிசமான சூலையொடு குஷ்டரோகந்
திரைத்திட்ட நீரிழிவு மேல்கடுப்புச்
செங்கரப்பான் புண்புரைகள் சிதறிப்போகும்
உரைத்திட்ட தைலத்தி லுறுதிமெத்த
வுத்தமனே வேறொன்றை யுரைக்கிறேனே. (114)

குறுந்தொட்டித் தைலம்.

உரைக்கிறேன் குருந்தொட்டி லேரைமைந்தா
வோர்நிறையாங் கல்துலா மிடித்துப்போட்டு
நிரைக்கிறேன் றூணி நீரெட்டொன்றுக்கி
நேராக யெண்ணெயிரு நாழிவிட்டு

கரைக்கிறேன் கியாழத்தா லரைத்துமைபோற்
கசகசா விருபலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கிறே னெண்பதென்ற வாதமெல்லா
நடுநடுங்கி யோடுமடா நயந்துகாணே (115)

கொடுவேலி வேர்த்தைலம்

நயமான கொடுவேலி பலந்தான்பத்து
நன்முக இடித்திட்டுப் பதக்குநீரில்
வயமாக வற்றக்காய்ந் தெட்டொன்முக்கி
வளமான நல்லெண்ணெய் நாழிவிட்டு
நியமாக புன்னைக்காய் வெண்ணெய்கூட்டி
நிலையான சீரகமும் பலந்தானென்று
ஜெயம்பெறவே யரைத்ததனைப் பாகிற்சேர்த்துச்
சீரான மெழுகுபத மானவாறே. (116)

ஆனதயி லம்வடித்து முழுகும்போது
யானந்த வாயுவினே டனந்தம்வாய்வுந்
தேனமருவுங் குழலாள்தன் வாதத்தோடும்
சிடிசொரியுந் தினவுமுதற் சிரங்குகுட்டம்
போனதென்ன வரைப்புக் கரந்திசூலை
புண்புரைக ளோடுபொடி பிளவைவீக்கம்
நானெனவே வந்தநோய் பலவுந்தீரும்
நல்லதொரு தைலமது நாடிப்பாரே. (117)

சீரகத்தைலம்.

பாரப்பா சீரகந்தான் படியோரண்டு
பதமாக விடித்துநீர் பதக்குவார்த்துச்
சீரப்பா யெட்டொன்முய்க் கியாழம்வாங்கித்
தெளிவாகயெள்ளெண்ணெய் படிதான்வாரு
காருற்றயுங் கார்போகி பலமிரண்டு
கியாழத்தா லரைத்ததனைக் கலக்கிச்சேர்த்தே
ஏறவே மெழுகுபத மாயிறக்கி
மியல்பாக முழுகிவரக் குணத்தைக்கேளே (118)

குணமென்ன குன்மமெட்டும் வாய்வுபத்துங்
குட்டமொடு தழுதனையுங் குண்டவாய்வும்
மணமென்ன வாந்திபித்தங் கிறுகிறுப்பும்
வாயுவினல் வந்ததொரு சோகைபாண்டுங்
கணமென்ன வுஷ்ணரோ கங்களும்போம்
கபாலத்திற் சூடுகப நீர்க்கட்டும்போம்
பனமென்ன நோய்தீரா மருந்துமுண்டோ
பார்தனிலே மூலத்தமூலிகைக்குட்பாரே. (119)

மூலிகைக்குள் வெகுமூலி சஞ்சியப்பா
மூலத்துதே மலதோறுங் குவடுதோறுஞ்
சாலவே வெகுபூடி நாட்டிற்குள்ளே
சாதகத்தை யறியார்கள் சண்டிமாந்தர்
ஆலவே வைத்தியன்முன் குணத்தைக்காணன்
ஆண்மையினல் வயிற்பிழைக்க வலிவான்மட்டை
சோலியென்ன மனதுவைக்க வேண்டாஞ்சொன்னேன்
துரையான திருநூற்றின் முறையைப்பாரே. (120)

சூரிவித்துத் தைலம்.

நூற்றிலே யின்னமொரு தைலங்கேளு
நுணுக்கமுள்ள சூரிவித்து துலாந்தான்காலே
ஏற்றியே யிடித்துநீர் பதக்கிற்கொட்டி
யெட்டொன்று பொருவிரகால் வற்றக்காய்ச்சிப்
போற்றியே வடித்ததனி லெண்ணெய்நாழி
போதவிட்டுக் கற்கவகை சாற்றக்கேண்மின்
சூற்றியே யறுமாதக் காடிநாழி
சுக்கதிலே யொருபலந்தா னரைத்துச்சூட்டே (121)

சூட்டியபின் பதமெழுகா யிறக்கிக்கொண்டு
தோன்றவே முழுகிவர மண்டலந்தான்
ஓட்டிவிடுங் கிரந்திகுட்டஞ் சூலகுன்மம்
மூண்டுவிடுங் கிராணியெல்லா மூள்மூலத்தை

வாட்டிவிடுஞ் சூடுமுதல் வாங்கிப்போகும்
மைந்தனே மலக்கட்டு மயங்கியேகுந்
தாட்டிகமாய் தீர்த்துவிடுந் தைலப்போக்கு
சஞ்சீவி யொப்பென்ன சாற்றினேனே. (122)

கிழ்க்காய் நெல்லித்தைலம்.

சாற்றவகை யின்னங்கேள் கீழ்க்காய்நெல்லி
சமூலமாய் காற்றுலா மிடித்துக்கொண்டே
ஆற்று நீரதுவிட்டுக் கியாழஞ்செய்தே
யப்பனே யெட்டிரண்டுப்க் காய்ச்சிவாங்கி
மாற்றிடுவா யெள்ளெண்ணெய் படிதான்ரண்டு
வளமான சருக்கரையும் பலமோரைந்து
ஏற்றியே கர்க்கமிட்டு மெழுகதாஞல்
இயல்பாக முழுகிவரத் தீருநோய்கேள் (123)

கேளடா பித்தமென்ற தெல்லாந்தீரும்
கிறுகிறுப்புத் தலைச்சுழற்றல் வாய்நீரூரல்
நாளடாரத்தபித்தம் வெருத்தபித்தம்
நலமான விளைப்பிறைப்புப் பித்தரோகஞ்
சூளடா மஞ்சள் நீ ரிரத்தமூத்ரஞ்
சூடுமுத லுஷ்ணங்கள் பலவும்போகும்
வேளடா மேலெரிவு கைகாற்காந்தல்
வெழுத்தமயிர் சுறுப்பாகும் விதத்தைப்பாரே, (124)

சங்கம்வேர்த்தைலம்.

விதமாக சங்கம்வே ரதனைத்தோண்டி
வெட்டிவந்து காற்றுலா மிடித்துப்போட்டு
பதமாகத் தூணிசல மெட்டொன்றுக்கிப்
பாரதிலே யெள்ளெண்ணெய் படிரண்டிட்டே
அதமாகு மிளகுபல மரைத்துச்சேர்த்தே
யப்பனே மெழுகுபத மானவாறு
சுதமாக வடித்ததனை முழுகும்போது
சொல்வதென்ன குட்டமொடு சொரிசிரங்கே. (125)

சிரங்குடனே கிரந்திபத்துஞ் சூலரோகஞ்
செங்கரப்பான் வண்டுகடி சில்விஷங்கள்
குரங்குபோ லிருக்கின்ற வலிசயங்கள்
குற்றிருமல் வாதஜலங் குடிபோமென்று
வரங்கொடுக்குஞ் சிவனுரைத்த வார்த்தைகேட்டு
மாயிசொல்ல யானறிந்து வாழ்த்தினேன்காண்
அறங்கதுவா யின்னமொரு தைலங்கேளா
யமுக்கிரா பலம்பத்து வாகாய்வாங்கே. (126)

அமுக்குராவேர்த் தைலம்.

வாங்கியே யிடித்ததனைப பதக்குநீராய்
வடித்துக்கொண் டெண்ணெய்படியதனிற்சேர்த்தே
ஓங்கியே யெலுமிச்சஞ் சாறுநாழி
யொக்க விட்டு மெழுகுபதமாகப்பார்த்துத்
தேங்கியே வடித்தெடுத்து வைத்துக்கொண்டு
திறமாக முழுகிவரச் சுருக்கைச்சொல்வேன்
பாங்குடனே பீனிசங்க ளெல்லாம்போகும்
பரிவுள்ள மண்டையிடி பறந்துபோமே. (127)

இஞ்சித்தைலம்.

பறப்பதற்குப் பின்னுமொரு தைலங்கேளு
பச்சையிஞ்சி கற்றுலாம் பரிந்திடித்துச்
சிறப்புடனே பிழிந்துவடி கட்டிக்கொண்டு
தெளிவுறவே யெண்ணெயதிற் படிதான்விட்டே
உறப்புடனே பசுவின்பால் படியேயாகும்
உறுதியாய் மெழுகுபத மாகவாங்கிச்
சிறப்புடனே முழுகிவரப் பருவமாகத்
திடம்பெறவே தீருநோய் நிகழ்த்துறேனே. (128)

நிகழ்த்துகிறேன் மண்டையிடி சூலவாதம்
நிலைகெட்ட பீனிசங்க ளிளைப்பிளைப்புப்
புகழ்த்துகிறேன் சூலையொடு வாதவாய்வு
பொல்லாத கால்கடுப்பு நெஞ்செரிப்பு

மகத்திலே மெய்ந்நோவ தெல்லா நீங்கும்
மாளுமடா குட்டங்க ளனந்தங்களு
ஜெகத்திலே நாடாமற் போகுப்பாரு
செம்மூள்ளியெண்ணெய்தனைச்செப்புவேனே(21)

செம்மூள்ளித் தைலம்.

செப்புவேன் செம்மூள்ளி பலநூறப்பா
சிறக்கவே சமூலமா யிடித்துப்போட்டே
ஒப்புவேன் றூணி நீ ரதிலேயூற்றி
யுறுதியா யெட்டொன்று யிறக்கிக்கொண்டே
அப்புவே னதைவடித்து நாழியெணெய்
யதைவடித்து காய்ச்சிபே யிறக்கிவைத்து
நப்புவேன் முழுகிவரும் காலத்தன்னில்
நன்றுகத் தீருநோய் நவிலக்கேளே (130)

நவிலக்கேள் சயமீளை சயரோகங்கள்
நாடாது மந்தார காசந்தானும்
கவிலக்கேள் வாதமெல்லாங்காணுதோடும்
கண்ணினீர்ப் பாய்ச்சலோடு குறைநோயெல்லாம்
அவிலக்கேள் புண்புரைக ளனைத்துந்தீரும்
மரையாப்பு க்கிரந்திமுத லண்டவாய்வு
உவிலக்கேள் வீக்கமொடு விடப்பாகந்தான்
ஓடுமடா வித்தைல முழுகும்போதே. (131)

சாரணைவேர்த் தைலம்

முழுகவே யின்னமொரு தைலங்கேளு
மூக்கியமாய்ச் சாரணைவேர் பலந்தான்பத்துந்
தழுகவே யிடித்ததனைப் பதக்குநீரிர்
தாக்கிலியே யெட்டொன்றுய்க் காய்ச்சியேதான்
ஒழுகவே யொருநாழியெண்ணெய் சேர்த்தே
யுத்தமனே மெழுகுபத மாயிறக்கிச்
செழுயவே முழுகிவரும் போதுமைந்தா
சிதறிப்போம் வாதத்தால் வந்தகூறே (132)

இருவேலித் தைலம்,

கூர்மை விருவேலி பலநூறப்பா
கொத்தாக நிறுத்திடித்துத் தூணி நீரிற்
பேருக விட்டவித்தே யெட்டொன்றாக்கிப்
பேணியே யெண்ணெயதில் நாழிவார்த்து
வீருகக் கொதித்துவற்றி மெழுகதாஞல்
மெய்யெங்கும் பூசிமெள்ள மூழுகும்போது
தேருத வுஷ்ணங்கள் கிறுகிறுப்புச்
சேட்மபித்தங் கண்புகைமண்ட லத்திலாமே. (133)

அகிர்கட்டை த்தைலம்

ஆமின்ன மகிற்கட்டை பலமோகேளா
யைம்பதுகாண் றூக்கியதைத் தூளாய்ப்பண்ணித்
தாமேநீர் தூணிவிட்டே யெட்டொன்றாக்கித்
தப்பாம லெண்ணெயதி னாழிசேர்த்தூப்
போமேகேள் மெழுகுபத மானவாறு
புகழாக வடித்துநீ மூழுகினுக்கால்
வேமின்ன நீர்த்தோஷ முடனேயப்பா
மேகங்க டருமென்று விளம்பினேமே. (134)

அறுகம்வேர்த் தைலம்.

விளம்புவே னறுகம்வேர் பலந்தா நூறு
வேரிலுள்ள பச்சையெல்லாந் தள்ளிப்போட்டுத்
தளம்பவே நன்றாக வவித்துக்கொண்டு
தண்ணீர்தா னூறுபடி யதிலேவார்த்துக்
குளம்பாக் காய்ச்சிடுவா யெட்டொன்றாக
குறிகண்டு வடித்தெண்ணெய் நாழிசேர்த்து
வளம்பெறவே மெழுகுபத மானவாறு
வாங்கியே பருவமாய் மூழுகுவாயே. (135)

மூழுகியே வரும்போது குணத்தைக்கேளு
மூலத்துச் சூடுடனே கபாலச்சூடும்
தழுவியே பித்தமெல்லாந் தலைகெட்டோடும்
தன்னுக்குள் வாதமெல்லாந் தவறுண்டேபோம்

அழுகியே வருங்கிரந்தி சூலைநீர்கள்
ஆனதொரு வயிறெரிவு நெஞ்சிலெரிவு
கொழுவியதோர் நீர்க்கட்டுப்பு மேல்வரச்சி
கோபித்த வக்கினியுங் குளிர்ந்துபோமே. (136)

கொடிப்பைத் தைலம்.

குளிரவின்னம் வகையொன்று சொல்லக்கேளு
கொடுப்பையிநீர் படியெண்ணெய் சரியேயாகும்
தளிரான கோஷ்டமதில் பலந்தானென்று
தன்மையுள்ள பசுவின்பால் விட்டேயாட்டி
எளிதாகக் கரைத்துவிட்டு மெழுகதானுல்
யிறக்கிமெள்ள வடித்துக்கொண் டெழிலாய்நானும்
நளினமாய் முழுகிவர மண்டலத்தில்
நலமாகத் தீருநோய் நவிலக்கேளே. (137)

கேளப்பா பித்தமெல்லாங் கெதிகெட்டோடுங்
கிறுகிறுப்பு மண்டையிடி ஜன்னிதாகம்
பாளப்பா வுஷ்ணங்களுட்சுரங்கள்
படுபாவி மேலெரிவு கைகாற்காந்தல்
தேளப்பா கண்ணெரிவு சிரசுசூடுந்
திரேகவலி யெரிகுன்மந் தீர்ந்துபின்னும்
வாளப்பா கண்ணுக்குத் தெளிவுண்டாகும்
மகத்தான தைலமிது பருவிச்செய்யே (138)

கையாந்தகரைத் தைலம்.

செய்யவே யின்னமொரு சேதிகேளு
செகத்திலுள்ள கையாஞ்சாற் படிதானென்று
வெய்யவே குமரிச்சார் படிதானென்று
விளம்பவே நெல்லிக்காய் சாறதொன்றே
உய்யவே மூன்றுமது வொக்கச்சேர்த்தே
வுறுதிபெற வெள்ளெண்ணெய் படிதானுகும்
மெய்யாகச் சாதிக்காய் பலமவ்வீதம்
விருதாக வேயரைத்துக் கலந்துபோடே. (139)

போட்டுவற்றை மெழுகுப தமாசப்பார்த்து
புகழ்பெறவே வதைத்தெய்த்து முழுகும்போது
தாட்டிகமாய்க் கண்ணெவு தலேநோவோடு
சளமான செவிநேவுஞ் சார்பித்தத்தை
ஓட்டிவிடும் உஷ்ணகங் பீனிசங்க
ளோடிப்போ மென்றுநானு ரைத்தவாறு
நாட்டிலுள்ளோர்க்கின்னமொரு தைலங்கேளு
நலமான சவரிபலம் நூறுவாங்கே. (140)

சவரித்தைலம்.

பலநூறு தானிடித்துத் தூணிநீரிற்
பண்புடனே யெட்டொன்றுப் வற்றக்காய்ச்சி
சலமதனை யிறக்கிக்கொண் டெண்ணெய்நாழி
தயங்காம லிட்டொன்றுப்க் கூட்டிச்சேர்த்து
நலமாகக் கருஞ்சீரம் பலந்தானொன்று
நாடியரைத் தநிற்போட்டுக் கரைத்திட்டேதான்
பெலமான மெழுகுபத மாகும்போது
பிசகாமல் வடித்தெதடுத்து முழுகுவாயே. (141)

வாய்ப்பான வாதமொடு குட்டமெங்கே
வாதத்தா லெழுந்ததொரு கரப்பானெங்கே
காய்ப்பான காய்ப்பேது கழலேயேது
கண்டத்தில் வீக்முதல் வாடிப்போகும்
நோய்ப்பான நோயெல்லா மகன்றுபோ கும்
நுணுக்கமாய்த் தைலமொன்று நுவலக்கேளுச்
சாய்ப்பான செந்நாவற் பட்டைத்தூளுஞ்
சாங்கமாய்ப் பலம்நூறு சாற்றிடாயே. (142)

செந்நாவற் பட்டைத்தைலம்

தாக்கியே யிடித்ததனை தூணிநீரிற்
தயங்காமற் போட்டுபத மெட்டொன்றுக்கி
நோக்கியே பால்நாழியுடனே மைத்தா
நுணுக்கமாய் வேப்பெண்ணை படிதானெண்பே

ஆக்கியே வசம்பதுவும் பலமேதூக்கி
யரைத்துநீ கரைத்துவிட்டு மெழுகதானுற்
தூக்கியே வடித்துமெள்ள முழுகினுக்கால்
துடியான வாதமொடு பித்தம்போமே. (143)

அகிற்பட்டைத் தைலம்.

போகவே யின்னமொரு தைலங்கேளு
புகழான வகிற்பட்டைப் பலத்தானூறு
தாகநீ யிடித்ததனைத் தூணிநீரிற்
சாதகமாய்ப் போட்டவித்தே யெட்டொன்றுக்கி
வேகமா யெண்ணெயதில் ஞழிவிட்டு
வேப்பெண்ணெய்ப் படுபாதி கூடச்சேரு
நாகவல்லிக் கொடிச்சாறு மொக்கவார்த்து
நலமாக மெழுகுபத மானபோதே. (144)

திராப்பாசித்தைலம்.

பதமாக முழுகிவரத் தீரும்தோய்கள்
படுபாவி வாதமெல்லாம் பறந்துபோகும்
இதம்படவே யின்னமொரு தைலஞ்சொல்வேன்
இடித்திடுவாய்த் திராப்பாசி பலத்தான்ரண்டு
சிதமான தூணிநீர்த் தன்னிற்போட்டுச்
சிறக்கவே யெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
சுதமாக யேரண்டத் தெண்ணெய்நாழி
தூளாக்கி மஞ்சள்பலம் போட்டுக்கிண்டே. (145)

கிண்டியே வைத்திடுவாய் மெழுகதாக
கெடிகலங்கி யோடிவிடும் வாதமெல்லாம்
பண்டிதருக் கிம்புறைகள் பாடமுண்டோ
பார்ப்பதற்கு வெகுசுலுவு பரிந்துபாரு
கண்டிதமாய் சொல்லிவிட்டே னுணுக்கமெத்தக்
கதிகெட்ட நோய்களது தீரவென்றே
உண்டுகொண் டிருப்பதற்குச் சொண்முண்டோ
வுறுதியிந்த நான்முறையை யூணிப்பாரே (146)

பொன்னுங்காணிக்கிருதம்.

ஊணியே யின்னமொரு சேதிகேளா
உள்ளுக்குத் தைலமே டுகிருதஞ்சொல்வேன்
காணவே காணிவேர் பலந்தானென்று
கனமான வெட்டிவேர் விலாமிச்சவேர்
பூணியே யோரிதழ்வேர் சிறுசைதான்
புகழ்வேரும் வகைக்குமொரு பலமதாகப்
பாணியே பாலதுவார்த் தரைத்துநெய்தான்
படிரண்டுக் குள்ளிட்டு காய்ச்சுக்க யிச்சே. (147)

காய்ச்சியே யுட்கொள்ளக் கரண்டிவீதங்
கண்ரோகம் பதினெட்டுங் காணாதோடும்
மாச்சுதே யுட்சுரங்க ளகன்றுபோகும்
மனுவாதி யுஷ்ணங்கள் மேகமின்னும்
போச்சுதே வரட்சியுடனுள்ளுள்ரோகம்
புண்ணை வக்கரங்கள் போகுஞ்சொன்னேன்
ஏச்சுதே யெண்ணுதே யிடுசாதிக்கா
யினிதான வதிமதுர மாச்சக்காயே. (148)

சதாவேரிக்கிருதம்.

காயென்று வகைக்குமொரு கழஞ்சிவீதங்
கரைபாலில்முன்போல நெய்ச்சுள்ளேதான்
தாயென்றே யின்னமொரு கிரதஞ்சொல்வேன்
சதாவேரிக் கிழங்கினுட சாறுநாழி
வாயென்ற திரிகடுகு திரிபலாதி
வகைவீதங் கழஞ்சியொன்று கூடச்சேர்த்து
சீயென்றே யெரியிட்டு மெழுகதானல்
சீக்கிரத்தில் வடித்தெடுநீ யியல்பைக்கேளே. (149)

இயல்பாகக் கரண்டிநிரை யுண்ணுங்காலே
யெழுந்ததொரு சுரப்பான்க ளெல்லாம்போகும்
மூயலான நீர்விஷங்க ளனைத்துந்திரும்
முறுக்கியெழும் வாய்வுடனே யிரைச்சலேசூந்

சியலான பித்தமொடு சிலேர்ப்பனங்கள்
ஜெனித்ததொரு கிறுகிறுப்புச் சொரியாமாந்தம்
மியலான கிருமிகளு மற்றப்போகும்
வெண்மையா யின்னமொரு கிருதங்கேளே. (150)

திரிகடுகுக்கிருதம்

கிருதமாந் திரிகடுகு திரிபலாதி
கேளப்பா வகைவகைக்குப் பலந்தானென்று
நிருதமாய்ச் பலம்பத்துப் படியிற்குள்ளே
நேராகப் போட்டுபத மெட்டொன்றுக்கி
விருதாவாய்ப் போகாது மெழுகதானால்
மேன்மையாய் வடித்ததனை வைத்துக்கொண்டு
சிறுகவே கறண்டிநிறை கொள்வாயானால்
திருகிற வியாதியதைச் செப்பக்கேளே. (151)

செப்புவேன் சீரகமு மோமங்கூட்டிச்
சிதருமற் சூ ணித்துப் பதனம்பண்ணி
இப்புவியில் வெருகடிநெய்த் தேனிற்கொள்ள
வீரெட்டுக் காப்பானுஞ் சிரங்குசூட்டம்
நப்புவேன் கிருமியுடன் ரஜாயணங்கள்
நாடாது கிரந்திமுதல் கிராணிமூலம்
எப்போதும் வாராது சொன்னேன்மைந்தா
யின்னமொரு கிரதவகை யிபப்பக்கேளே. (152)

தூதுவளைக்கிருதம்

இயம்பக்கேள் தூதுவளை பலமோபத்து
இயல்கண்டங் கத்திரியு மதுதான்வீதந்
தயவான துளசியுமவ் விடையேசேரு
சாற்றியதோர் தோடையது மொப்பதாகும்
நயம்பெறவே பலம்பத்து விஷ்ணுகிராந்தி
நன்முன பிரமியதும் பலம்பத்தாகுஞ்
செயம்படவே யிடித்திவற்றைத் தூணிநீரில்
திரமுடனே யெட்டொன்று பெரித்திறுத்தே. (153)

இறுத்திட்டே னெண்ணெயுட் நெய்யுங்கூட்டி
யிதமுடனே திப்பிலியுஞ் சிற்றரத்தை
உறுத்திட்டே வகைக்கிபரை பலமாய்த்தூக்கி
யொளிமெழுகு போலரைத்துச் சேர்த்துக்கிண்டி
மூறித்திட்டுப் போகாமல் வடித்துக்கொண்டு
மூக்கிமாய்க் கரண்டி நிரையளவேயாக
ஒருத்திட்டங் கொண்டாக்கால் தீருநோய்க்கே
வுற்றதோ ரிருமலெல்லா மோடிப்போமே. (154)

ஓடிப்போந் தேன்கூட்டிக் கொண்டாயானு
லுட்சுரங் களிரைப்பிகோப்பு துப்புகக்கல்
நாடாது வாய்வோடு கபங்கட்கெல்லாம்
நடுங்கியே பறக்குமடா நளினமாகுந்
தேடிப்போந் திரிகடுநெற் பொரிதன்னேடே
தேனிலே தின்றுவிடு கிரதஞ்சேர்த்து
வாடிப்போ மோகோகோ வகுத்தநோய்கள்
வண்மையா மென்றருளிச் செய்தவாறே (155)

சன்னிக்குத் தைலம்

செய்தபடி சன்னிக்குத் தைலமொன்று
செப்பக்கேள் வெள்ளுள்ளி வசம்பினேடே
உய்ததொரு நிலவேரு முசுறுமுட்டை
யுறப்பான தண்டுடனே கோழிமுட்டை
நெய்தமுள்ள நெய்தாழி வேம்பினெண்ணெய்
நிரையாகுஞ் சரக்குகளைப் பலமாய்த்தூக்கிக்
செய்தபே ராமணக்கு யெண்ணெய்நாழி
சிறப்பாக விட்டதிலே பொரித்துக்கொண்டே (156)

கொண்டுவிட வெண்ணெய்க்கு வகையைக்கேளு
கோலமுள்ள சுக்கிடித்துக் கிளிபோற்கட்டிச்
சுண்டவைத்துத் தைலத்திற் பதமாய்மைந்தா
சுகமாகக் குத்திவிடசன்னிவாதம்

மிண்டுசெய்யும் வலியைத்துஞ் சிதறிப்போகும்
மீளாத சன்னிதனக் குள்ளுக்கேற்றப்
பண்டுள்ள நோயதுதான் தீருமென்று
பண்பாக வித்தைல மியம்பினேமே. (157)

நவச்சாரக் குழம்பு.

இயம்புகிறேன் நவச்சாரக் குழம்புகேண்மின்
யெருக்கம்பா லுழக்குடனே கள்ளிப்பாலாற்
சுயமான சாமது கழஞ்சுபத்துச்
சுகமாகத் தானரைத்தே மெழுகதாக்கி
நயம்பெறவே யாமணக்கி னெண்ணெய்சேர்த்து
நாணயமாய்ச் செப்புதனி லடைத்துக்கொண்டு
சயமான பெருவயிறு மகோதரங்கள்
தன்னோடு ஆப்பல் விஷப்பாகந்தானே. (158)

பாகமாய் மிளகுடனே குன்றிவித்து
பகருகின்ற சுண்டைக்காய் வீதங்கொள்ளு
வேகபாய்க் கிருமிகளு மலபேதங்கள்
விட்டுவிட வேணுமென்றுல் வெந்நீர்கொள்ளு
நாகந்தன் விஷம்போன்ற நீகளெல்லாம்
நாடாது ரவிகண்ட பனியைப்போலே
ஏகுமே யிம்மருந்து கொண்டாயானு
லேழுநாள் பால்கொள்ள வியல்பதாமே. (159)

மேனிச் சூரணம்.

தானென்ற மேனிச்சூ ரணமேசெய்து
தாங்கரிய சீரகத்து லொக்கச்சேர்த்து
நாமென்ற நாற்பதுநாள் கொள்வீரானுல்
நாடாது வாய்வெல்லா மனந்தந்தீருஞ்
சாமென்ற தீபனங்கள் மிகவுண்டாகும்
சனத்திலே மந்தமெல்லாந் தவறுண்டோடும்
வேமென்ற சில்விஷங்க ளெல்லாந்தீரும்
வேதாக் சினிக்குமரன் பொடியதாமே. (160)

சிரசப் பொடி.

பொடியான பொடியொன்று சொல்லக்கேளு
புகழ்பெரிய சிரகமோ பலந்தானென்று
செடியான வொரிதழ்தன் பொடிதானென்று
சிவந்தொரு சந்தனமும் பலந்தானென்று
மடியவே யிடித்துத்தூள் வைத்துக்கொண்டு
வளமாக நறுநெய்யிற் கழஞ்சியுண்ணு
துடியான வுஷ்ணங்கள் ஊனில்ரோகஞ்
சுருக்நடனே நீர்கடிப்புப் போகம்போமே. (161)

மேகமுட னுட்காய்ச்ச லெரிவுகாந்தல்
மிகைபாக வந்தகுன்ம மெல்லாந்தீரும்
போகுமின்ன வெலும்புருக்கித் தசையடைப்புப்
பொறுக்காத நீர்த்தாக மார்பினெயும்
வேகமுறம் வாய்நாற்ற மேனுற்றங்கள்
விட்டோடிப் பறக்குமின்னம் விளம்பக்கேளு
கூகைநீர் கஞ்சாவுஞ் சாதிக்காயுஞ்
கோகோ வாய்விளங்கங் குராசானியோடே. (162)

குராசானி யிவைபலமோவ் வொன்றேயாகுங்
குணமாக வேவறுத்துச் சூரணித்து
நிராசானி யாகியதோர் தூளில்மைந்தா
நேராகக் கருவேப்பின் பொடியைச்சேர்த்தே
யுராசானி வாழைப் பூவவித்துப்பிட்டாய
யுறப்பிழிந்து சாற்றினிலே கொண்டாயானால்
முராசாணி யானதொரு கடுப்பிளைப்பு
மூலத்திற் சூடுபோய் முழங்குவாயே. (163)

கொடிவேலி சூரணம்.

முழங்கவே வேறுவகை சொல்லக்கேளு
மூதண்டக் கொடுவேலி சூரணித்து
விழுங்கவே படியொன்று சினிப்பாவு
வீரூக மேனித்தூ ளளவேயாகுங்

கழங்க மறக்சார்போகி யரிசியேடே
சருஞ்சீரக நற்சீரம் மூன்றுமைந்தா ம்ப
புழுங்கவே வகைவகைக்நப் பலமொன்று
புனிதமாம்ப் பொடித்திட்டுப் புகழ்ந்துவைத்தே(6)

வைத்திட்ட சூரணத்தைத் தேனிற்கொள்ள
வருஞ்சூல கிரந்திகுட்டம்வாதவாய்வு
வெய்த்திட்ட வண்டுசடி புழுவெட்டோடே
விஷகடியு மெலிகடியும் விலகிடபோகும்
மெய்த்திட்ட மாகியதே ரபானவாய்வு
விரைந்திறங்கு மூலத்திற் சூடும்நீங்குங்
கைத்திட்டத் தொழிலதனைச் சொல்லிவிட்டேன்
கனமான மிளகுநீர்க் கிய முங்கொள்ளே. (165)

தும்மட்டித் தைலம்,

கொள்ளவே மண்டலத்திற் பாண்டுநீருங்
குணமாக வின்னமொரு முறைபைக்கேளு
பிள்ளையில்லாப் பேர்களுக்கு பருந்துசொல்வேன்
பேயனது தும்மட்டி வித்துவாள
மூள்ளட்டி குழித்தைலஞ் சமனுப்வாங்கி
யுறுஞ்சள் பொடியதுவோ காசேதூக்கு
வள்ளலே தைலமுமந் நிரையேசேர்த்து
மத்தித்துக் கொண்டுவடக் கெர்ப்பவாய்வே. (166)

கெர்ப்பவாய் வோடவென்று வீணுப்மைந்தா
கிலேசிக்கத் தான்வேண்டா நோய்கடருஞ்
செப்பமுடன் மருந்துண்ணில் வெந்நீர்கொள்ளு
திரும்பியே பேதித்தார் சஞ்சிகொள்ளு
நப்பவே கொடுத்தநாள் முதலாய்த்தொட்டு
நன்றாக வொருபொழுதாய்க் கொண்டுவாநீ
அப்பனென்று நீனையாதே யுறுதியாகும்
மதைத்தவிர பின்னையுரோர்தடைவுண்டாபோ(167)

கொம்பரக்குக்கிரதம்.

தடையில்லா கொம்பரக்குத் தரிக்க
சாதிக்காய் குராசாணியோமம்தானும்
திடமாகச் சூரணித்தே நல்லெண்ணெய்க்குள்த்
திரட்டியே கொண்டுவிடு சிறுபுன்னைக்காய்
குடலோடு பற்றியதோர் கிராணிமூலங்
கூத்துகின்ற குறுக்குவலி மூலச்சூடு
கடல்போல வந்ததொரு கடுப்பெல்லாம்போங்
காதடைப்பு புண்ணினுக்குங் கண்டவாறே. (168)

மூசுறுமுட்டைத்தைலம்

கண்டதொரு சேதியுண்டு சொல்லக்கேளு
காதிலுள்ள வியாதியெல்லாங் கட்டாய்தீர
விண்டபடி பூநாக முசுறுமுட்டை
வேரிலுள்ள நண்டிறைச்சி வெள்ளையுள்ளிக்
கொண்டபடி கோழிமுட்டை வசம்புருக்கல்
குணமாக வகைவகைக்குக் கழஞ்சிகூட்டிப்
பண்டருளும் வேப்பெண்ணெய் தன்னிற்சேர்த்துப்
பதமாக வெரித்ததனைக் காதிற்பாய்ச்சே. (169)

பாச்சியே யடைத்திடுவாய்ப் பத்தாநாளிற்
பளிச்சென்று செவிகேட்குஞ் சீழ்பாச்சற்போம்
ஆச்சுதே குத்துவச்சற் பூச்சிசாகும்
அடைப்புவிடுங்காதிரைச்சலகன்றுபோகும்
வாச்சுதே யின்னமொரு வரிசைகேளு
வாயிலுள்ள வியாதியெல்லா மகன்றுபோக
பாச்சியே முன்பாகத்தில் தைலம்பூசிப்
பச்சையாய்த்தின்றெதுக்கப்பற்குத்துப்போமே(170)

குத்துவிடு முப்பிரண்டை வேர்க்கியாழங்
கொப்பளிக்கப் பல்லரணை தந்தசூலை
அத்துப்போ மசைந்தாலு முறத்துநிற்கும்
அழுக்கெல்லாந் தீர்ந்தகலு மதன்பின்கேளு

சித்தாகும் நாக்கில்வருஞ் சிங்கிரோகந்
தீரவொரு மருந்துசொல்வேன் சிவவேம்பின்வேர்
முத்தாகும் பல்விளக்க பத்தாநாளில்
மூறையானநோய்களெல்லா முழுதும்போமே(171)

வெள்வேல்வேர்த்தைலம்.

முழுதுமே போகவொரு மருந்துசொல்வேன்
மூதண்ட வெள்வேலுங் குமிளும்வன்னி
பழுதில்லாக் குண்டலமாம் பாலையோடே
பருத்ததோ ரெருக்கிலையு மரசுகாரை
தொழுதோண்டிப் பட்டையிவை சமனுப்த்தூக்கிச்
சுந்தரனே தூணிநீ ரதனிற்போட்டு
வழுவுபடா தெட்டொன்றுப்க் காய்ச்சிக்கொண்டு
வளமான செம்பீரஞ் சாறுநாழி. (172)

நாழியா மெள்ளெண்ணெய் யளவாய்வார்த்து
நலமான துருசுவெள்ளைக் குந்தரிக்கம்
வீழவே வகைவகைக்குக் களஞ்சிவீதம்
மிரளாமற் பொடித்திட்டு வடித்ததோடே
கோழியு துதிரம்விட்டுக் கொப்பளிக்கக்
குறட்டைகளில் கட்டுமுதல் குலைந்தபல்லின்
வாழியென்ற புண்கள்முதல் வீக்கமெல்லாம்
வாங்கிப்போம் வளமையுடன் வரிசைபாரே. (173)

பாகலிலைத்தைலம்.

பார்ப்பதற்கு இன்னமொரு சேதிகேளு
பாகலிலைச் சாறுடனே கொம்மட்டிச்சார்
வேப்பிலையின் றன்சாறு மெருக்கன்சாறும்
விழுதியுட லிலைச்சாறும் வகைக்குநாழி
சேர்ப்பது யாம்மைக்கெண்ணெய் வேப்பெண்ணெய்யும்
சேர்வைக்கு நாழிவிட்டுப் பதமாய்வாங்கித்
தார்ப்புடனே காசிடைதான் கொள்ளும்போது
சலக்கட்டு மலக்கட்டுங் கிருமிபோமே. (174)

கிருமியென்ற புழுக்களெல்லா மற்றுப்போகுங்
கெர்ப்பத்தில் மலக்கட்டு கெதிகெட்டோடும்
வருமையென்ற வாய்வனைத்தும் அன்றேபோகும்
வாதமொடு மலக்கட்டுந் திரண்டவாய்வும்
ஒருமித்துக் காணும லேங்கியோடும்
உலகத்திற் சுருக்கிதுதா னுணர்ந்துதேறு
கருமமென்ற வகைகளெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கஷாயத்தின்பெருமையினனுங்காட்டுவேனே (175)

கியாழகாண்டம்.

மருதோன்றிக் கியாழம்

காட்டுவேன் மருதோன்றி வேர்தான்மைந்தா
கால்பலங்கள் சீரகழு மொக்கச்சேர்த்து
ஓட்டுகிற யிருநாழி நீரிலிட்டே
யுழக்காகக் காய்ச்சியதை ரெண்டுவேளை
மூட்டுகிறேன் மூன்றுதினங் கொள்வீராஞல்
முறைச்சுரமும் விஷச்சுரமு மூலவாய்வு
மீட்டுவிடும் பித்தமொடு மாந்தந்தீரும்
விளம்புவே னின்னமொரு விதமுந்தானே. (176)

வெட்பாலக்கியாழம்.

விதமென்ன வெட்பாலை சீரகந்தான்
வீறுக வகைகைக்குப் பலங்கால்தூக்கி
இதமுடனே யிருநாழி நீரில்விட்டே
யெட்டொன்றுப்க் காய்ச்சியதை யிறுத்துக்கொண்டு
பதமாகக் குடித்துவரில் தீருநோய்கள்
பறக்குமடா வாய்வெல்லாம் பாருபாரு
மிதமில்லாக் குன்மவகை யனைத்துந்தீரும்
மேன்மையா யின்னமொரு வரிசைகேளே. (177)

வில்வவேர்க்கியாழம்.

வரிசையுள்ள நெற்பொரியும் வில்வவேரும்
வகைக்குக்காற் பலமாயீர் நாழிநீரில்
உரிசையுட னெட்டொன்றுப் வடித்துக்கொண்டே
யுட்கொள்ள வந்தசத்தி விக்கல்போகும்

பிரியமுட னின்னமொரு கியாழஞ்சொல்வேன்
பேரான மூன்னவேர் வில்வவேருந்
துரிசான சுக்குடனே வகைக்குக் காலாய்ச்
சூட்டியே யிருநாழி நீரிலிட்டே. (178)

முத்தக்காசுக் கியாழம்.

இட்டவித்தே யெட்டொன்றுப்ச் சுண்டக்காய்ச்சி
யெடுத்து நீ கொண்டிடவே விக்கல்வாந்தி
மூட்டவிடும் பித்தமுட னுழலேதாக
முறையான சுரந்தீரு மொழிந்தவாறு
சட்டமுட னின்னமொரு சேதிகேளு
தருவான முத்தமொடு விஷ்ணுகாந்தி
இட்டமுடன் காற்பலமா யிடித்துத்தூக்கி
யிருநாழி நீருனில்விட் டெட்டொன்றுக்கே. (179)

திரிபலாதிக் கியாழம்.

ஆக்கியே மூன்றுநா ளிருபோதுண்ண
வகன்றசய மீளையிளப் பதிகமூச்சு
போக்கிவிடு மதலேடு மீளகூட்டிப்
புண்ணியனே கியாழத்தைத் தேனிற்கொள்ளு
பாக்கியமா யின்னமொரு வகையைச்சொல்வேன்
பச்சைநெல்லித் தான்றியுடன் கடுக்காய்மூன்றும்
நோக்கியே வகைக்குக்காற் பலமேதூக்கி
நுண்மையாய் மிளகதிலே கழஞ்சுகூட்டே. (180)

கூட்டியே யிருநாழி நீரிலிட்டுக்
குலாவியே யெட்டொன்றுப்த் தேனுஞ்சேர்த்துச்
நாட்டியே திரிகடுகு சூரணித்து
நலமாக விட்டருந்த சிலேப்பனங்கள்
நீட்டியே கபமீளை யிளப்புக்காய்ச்சல்
நீங்குமே சயமனேத்தும் நில்லாதோடும்
ஓட்டியே விடுவதற்கா யின்னும்வேறே
யுரைக்கிறே னுலகத்தோர் பிழைக்கவென்றே. (181)

சந்தனக்கியாழம்.

வென்றதொரு சந்தனமும் விளாமிச்சோடு
வெட்பாலை முத்தமுடன் சுக்குமைந்தா
நன்றெனவே வகைக்குக்காற் பலமதாக
நலமுடனே தூக்கியிரு நாழிநீரிற்
பொன்றவே யெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புகழ்சினி யுடன்பத்து நாள்தான்கொள்ள
சென்றதொரு சுரம்வாய்வு சலதோஷங்கள்
சிரசிலுள்ள பித்தநீர் வாதம்போமே. (182)

வேம்புக்கியாழம்.

வாதமொடு தாகங்க ணீர்க்கடுப்பு.
மஞ்சளுறும் பித்தக்கா லைதீரும்
வேதமா யின்னமொரு கியாழஞ்சொல்வேன்
வேம்பினது பட்டையுடன் மிளகுஞ்சுக்கும்
நாதமுடன் வகைக்குக்காற் பலமேயாக
நளினமா யிருநாழி நீரிலிட்டுப்
போதமுட னெட்டொன்றாய் வடித்துக்கொள்ளு
புழுக்கிருமிமந்தமொடு வாய்வும்போமே. (183)

இருவேலிக்கியாழம்.

எல்லாந்தான் போகவொரு கியாழஞ்சொல்வே
னிருவேலி மதுரமுட னிஞ்சிமூன்றுஞ்
சொல்லாமல் வகைக்குக்காற் பலமாய்த்தூக்கிச்
சுகமாக விருநாழி நீரிலிட்டு
வெல்லவே தீயெரித்து யெட்டொன்றாக்கி
வீறுகப் பத்துநாட் கொள்வாயானால்
வல்லதொரு வாய்வுபித்தஞ் சோகைபாண்டு
வாங்கிவிடும் அரோசிகமும் வாராதென்னே. (184)

பச்சிலைப்புட்டவியல்.

வாராம லின்னமொரு சேதிசொல்வேன்
மைந்தனே புட்டவியல் மார்க்கங்கேளு
தாரான பேய்ப்புடலும் பற்படாகம்
தருந்துளசி தூதுளையுங் கண்டங்காலி

பாராமற் றேடையிலே சங்குசுக்கும்
பருவமுறு திப்பிலியு மிளகுமூலி
சீராக வகைவகைக்கோர் பிடியதாகச்
சேர்த்தமருந் தொருகழஞ்சு நிறுத்துவாங்கே. (185)

வாங்கியே துணியில்வைத்துப் புட்டேயாக்கி
வளம்பெறவே பிழிந்துகற் கண்டுதேனில்
ஓங்கியே கொண்டுவிடச் சிலேர்ப்பனங்க
ளுள்ளிருமு லுட்சுரங்கள் வாதவாய்வு
நீங்கியே போமென்று சொன்னேன்சொன்னேன்
நிச்சயமா யின்னமொரிலை நீர்சொல்வேன்
தாங்கியே முசுமுசுக்கை விஷ்ணுமூலி
தன்னுடனே நிலவேம்பு சங்கங்குப்பி. (186)

குப்பியது வகைவகைக்கோர் பிடியதாக
குறுகவே தானறிந்து சட்டிதன்னிற்
செப்பமுட னேயவித்துப் பிழிந்துகொண்டு
சேர்க்கின்ற மருந்தனைச் செப்பக்கேண்மின்
ஒப்பமுடன் சீரகமுஞ் சுக்கிரண்டும்
உடன்வறுத்துச் சூரணித்து மேலேதூவி
இப்புவியிற் றேன்கூட்டி யுண்பீராகில்
இஷ்டமுளவாதசுர மிடைந்துபோமே (187)

மூலிகை அவியல் நீர்.

இடைந்திடவே யின்னமொரு சேதிசொல்வேன்
இயல்பான நிலவேரு மிஞ்சியுள்ளி
மடந்தவே கொத்தானும் வேப்பமொக்கும்
வளமான தொச்சிலையும் வகையாய்க்கொண்டு
கடந்ததொரு மருந்தெல்லாங் கழஞ்சுவீதங்
கருவாக வேவவித்துச் சாறுவாங்கி
செடந்தனக்குத் தேன்கூட்டிக் கொள்வீராகிற்
செய்யசுரஞ் சன்னிமுதற் போமேவாதம். (188)

வாதமொடு சன்னியெல்லா மாண்டுபோகும்
வஞ்சகங்க ளிலலாமல் மருந்துசொன்னேன்
போதமுடன் கண்டவனே நல்லோனுகும்
பொய்யென்று சொல்பவனே பொல்லாப்பாவி
வேதம்போல் யிந்தநூல் வெளியாய்ச்சொன்னேன்
வித்தையிலே வெகுவித்தை லேசுவித்தை
காதமல்ல தூரமல்ல விருப்பிச்செய்து
கனம்பெற்ற வீஸ்பரனு யிருக்கலாமே. (189)

சிவனுர் வேம்புத் தைலம்.

இருக்கவே யின்னமொரு சேதிகேண்மின்
இயல்பான சிவவேம்புத் தைலம்வாங்கிச்
சுருக்கமாமம்மூலி சூரணித்துச்
சுகமாகத் தைலத்திற் குழப்பிக் கொண்டால்
முருக்கம்பூப் போலாகு மேனியெல்லாம்
மூனைமுகத்து வெட்டுண்ட புண்ணுமாறுஞ்
சுருக்கியதோர் கால்வெடிப்பு குட்டஞ்சூலை
தொலையாத கடிவிஷமூந் தோற்றுப்போமே. (190)

வீழிவேர்த்தைலம்.

தோற்கவே யின்னமொரு சேதிகேளு
சுருதியாம் வீழிவேர்த் தைலம்வாங்கி
ஆற்க்வே யம்மூலி சூரணித்தே
யதிற்குழப்பிக் கொண்டிடவே மண்டலந்தான்
ஊக்கமுள்ள குட்டமெல்லா மொழிந்துபோகு
மூடலில்வந்த வெளுப்பெல்லா மோடிப்போகுஞ்
சேர்க்கவின்னஞ் செப்புகிறேன் நிறமாய்க்கேண்மின்
சேங்கொட்டைத்தைலமதையிறக்கிக்கொள்ளே(191)

சேங்கொட்டைத்தைலம்.

இறக்கியே பஞ்சாங்கஞ் சூரணித்தே
யிதிற்குழப்பித் தின்றிடவே யெல்லாநோயும்
பறக்குமடா நரைதிரையும் வாராதென்று
பகர்த்திட்டே னின்னமொரு சேதிகேளு

சிறக்கவே வேம்பினுட தைலம்வாங்கிச்
சீரகத்தைப் பஞ்சாகச் சூரணித்து
நிறக்கவே யதிற்குழப்பித் தின்றுயாலுல்
நீங்காத வாதமெல்லா நீங்கிப்போமே. (182)

தேற்றுன் விரைத்தைலம்.

நீங்கிப்போங் குட்டமொடு கிரந்திசூலை
நீலையான நரைதிரையும் நீலகெட்டோடும்
ஓங்கியே யின்னமொரு சேதிகேளு
மூறுதியுள்ள தேற்றுனைத் தைலம்வாங்கிப்
வாங்கியே பஞ்சாகச் சூரணித்துப்
வலிவான தைலத்திற் குழைத்துட்கொள்ள
எங்கியே வியாதியெல்லாந் தடுக்கிட்டேதான்
இருந்தவிடம் விட்டோடு மிருப்புத்தானே (193)

வாலுளுவைத் தைலம் - பிராயன் தைலம்.

இருப்பான வாலுளுவைத் தைலம்வாங்கி
யியல்புடனே யுட்கொள்ள மண்டலத்தான்
கருப்பாயு நோய்களெல்லா மோடிப்போகுங்
கைகண்ட வித்தையடா தைலப்போக்குக்
கொருப்பான பிராயனது தைலம்வாங்கிக்
கொண்டிடவே யரையாப்புக் குஷ்டமோடு
பொருப்பான பற்பிளவு முதலாயுள்ள
பொல்லாத நோய்களெல்லாம் போகுந்தானே (194)

வெண்புரசுத் தைலம்-வெல்வேல்த் தைலம்.

தானென்ற வெண்புரசுத் தைலம்வாங்கிச்
சாதகமாய்க் கொண்டிடவே மண்டலத்தான்
ஏனென்ற குஷ்டங்க ளெல்லாம்நீங்கு
மெளிதாக விம்மருந்தை யிசைந்துசெய்நீ
பானென்ற வெள்வேலின் றைலங்கொண்டாற்
பல்லுளவு நின்றுவிடும் பழமையாகும்
ஊனென்ற வாய்வுபோந் தைலங்கொண்டால்
உறுதியாய்வியாதியெல்லாமொழிந்துபோமே. (185)

கருஞ்சீரகத்தைலம்.

ஓழியவே யின்னமொரு விவரங்கேளாய்
உறியகருஞ் சீரகமுங் கெந்தகந்தான்
றெளியவே பத்துக்கொன் முகச்சேர்த்துத்
திறமாகக் குழித்தைல மிறக்கியுண்ண
வளியவே வந்தவினை சிரங்குட்டம்
வாதமொடு சூலையெல்லா மகன்றுபின்னுந்
துளிபாயுஞ் சீழ்சலங்கள் கரப்பான்போகுந்
தோலுரியுந் தழுதணையுஞ் சுத்தமாமே. (196)

அமுக்குராவேர்த்தைலம்.

சுத்தமா யின்னமொரு சேதிகேளு
சூட்சமா அமுக்குராத் தைலம்வாங்கிப்
பத்தியா யதன்வேரைச் சூரணித்துப்
பாய்ச்சியே கொண்டுவிட மண்டலந்தான்
நித்தமாஞ் சூலையொடு கிரந்தி குஷ்டம்
நீங்காத வியாதியெல்லா நீங்கிப்போகும்
உற்றதொன்று உரைக்கிறேன் முக்கியமாக
வுரப்பான சினப்பா தைலம்வாங்கே. (197)

சினப்பாதைலம்-ஓமத்தைலம்.

தைலத்திற் சூரணத்தைக் குழப்பியுண்ணத்
தனதான சூலவகை தவறுண்டோடும்
மயிலொத்த செய்தியொன்று யின்னம்வேறே
மாச்சரியத் தைலமொன் றறையக்கேளு
பயிலொத்த வோமமொடு வசம்புகார்கோல்
பாங்காக விவைகளை நீ தைலம்வாங்கித்
துயில்பெற்ற முச்சரக்கைப் பொடித்திட்டேதான்
றுலங்கவே தூழப்பியுண்டால்சொல்லுவோமே. (198)

சாரணைய வேர்த்தைலம்.

ஓமென்றவியாதி யெல்லாங் கடலேபுக்கும்
உண்மையா யித்தைல மூரைத்தோங்கேளு
நாமெனவே யதிற்குழைப்பி யுண்ணும்போது
நாடாது கிரந்திகுஷ்ட நளினமாகும்

வாமென்ற சன்னியொடு வாதமேகும்
வளமாக வின்னமொரு வரிசைசொல்வேன்
ஆமென்ற சாரணைவேர் தனையிடித்து
அருமையாய்க் குழித்தைலம் வாங்கிடாயே. (199)

வாங்கியே வேரனைத்துந் தைலமாக
மைந்தனே யெடுக்கிறதோர் மார்க்கமாகுந்
தாங்கியே யவ்வேரின் சூரணத்தைத்
தானதிலே குழைத்துண்ணத் தீருநோய்கேள்
தீங்கான வாதமெல்லாஞ் சிதறிப்போகுந்
திசைவாய்வு மலபேதந் தீருந்தீரும்
பாங்கென்ற வித்தனையுஞ் சொன்னேமின்னும்
பகருவேன் வெந்தோன்றிக் கிழங்குபாரே. (200)

வெந்தோன்றிக் கிழங்குத்தைலம்.

கிழங்கதனை நிழலுலர்த்தித் தைலம்வாங்கிக்
கெட்டியாய் வெண்டோன்றி சூரணித்தே.
உளங்குளிர விதையதிலே விரவித்தின்மூல்
ஓடிவிடுங் குட்டமீ ரொன்பதுந்தான்
களங்கமற நீங்கிவிடு மண்டலத்திற்
காயசித்தி யுண்டாகுங் கவனமாகுஞ்
சளப்போக வோராண்டு கொண்டாயானால்
சகலசித்தி கைவசஞ் சஞ்சீவிபோலே. (201)

சஞ்சீவிபோலிந்த நூலைச்சொன்னேன்
சண்டாள மாபாவிக் கியம்வேண்டாம்
நஞ்சுபோ லாகுமிந்த மூறைதானப்பா
நடுங்கவே வியாதிகளை நாடிக்கொல்லுங்
கெஞ்சுவா ருலகுதனில் வாகடத்தைக்
கேட்டாலுங் கொடுக்காது கேள்வியன்றி
மிஞ்சவே யுபசரித்துத் தொண்டுசெய்து
வேணதன மீப்ந்தாலு மீயார்தானே. (202)

தானென்ற செப்தியொன்று சொல்லக்கேளு
சாதகமாய்ச் செந்தூரஞ் செய்துகொண்டே
வானென்ற லேகியங்கள் வளமாய்க்கூட்டி
வகையாக வனுப்பானத் தனையறிந்தே
ஏனென்ற கியாழமுட னிதனையெல்லா
மியற்றுவேன் ரெழிலாளி யிதமாய்த்தானே
பானுவின்முன் பனிநீங்கும் பான்மைபோலப்
பலபிணி யுநீங்கிவிடும் பரிந்தீய்வாயே. (203)

ஈவதிந்த நூற்ரெகைதா னிருநூற்றைந்து
மிகத்தினுள்ளோர்பிழைக்கவென்றிரங்கிச்சொன்ன
தாயிருக்கப் பிள்ளைக்கித் தியக்கமில்லாத்
தன்மைபோ லவுமிவற்றைச் சாற்றினேன்யான்
நோயில்லாச்சாவேது மொருநாளுந்தான்
உண்மையாய்க் கற்பமுப்பு நூற்றுக்குள்ளே
நேயமுடன் சொல்லிவிட்டேன் குருமுடிக்க
நேர்த்தியுள்ள குருமுடித்துக் கற்பங்கொள்ளே.(204)

வேறு.

என்னவே யிகத்தி லுள்ளோர்க்
கிரங்கியே சொன்னமார்க்க
முன்னமே யுரைத்த நூலின்
முயற்சியா மிந்த சூத்ரம்
வன்னமாம் பாரு லோக
மாரண மாகச் செய்ய
முன்னமே சொன்னே மிந்த
வைத்யபூ ரணமு முற்றே. (205)

முற்றிற்று.

இதிற் கண்டசுண்ணஞ் செந்தூரமுடிக்க வேணுமானால் இதைச் சேர்ந்தகற முப்புக் குருநூல்பார்க்க வெளியாய்த் தெரியும்

பரமபதி துணை.

அகஸ்தியர் வைத்திய பூரணம்-உாருல்

சொல்லியமருந்துகளும்

அதனல் தீரும் வியாதிகளும்.

அட்டவணை.

பக்கம் கம்பர்	பற்பங்கள்.
11-வது	பக்கத்தில்சொல்லியஅயபற்பம் செய்து சாப்பிடபாண்டு நோய், குஷ்டம், சூலை போம்.
12-வது	கர்ந்தபற்பஞ்செய்துசாப்பிட கிராணி, சோகை, பாண்டு, ஜலக்கழிச்சல், பிரமேகம், நீர்க்கிரிச்சினம் போம்.
13-வது	இரசபற்பஞ் செய்து சாப்பிட 18-சூலையும், 18-குஷ்டமும், கிரந்தி, யரையாப்பும், கூஷயங்களும்போம்.
13-வது	வெள்ளீய பற்பம் செய்து சாப்பிட நீர்ச்சுரப்பு, கல்லடைப்பு, தசையடைப்பு, நீர்க்கிரிச்சினங்கள் போம்.
14-வது	காரீயபற்பஞ் செய்து சாப்பிட சூலை, குஷ்டம், கிரந்தி பிரமேகம், தேககாந்தல், நீர்க்கடுப்பு, ஈாவறட்சி, போம்.
14-வது	பக்கத்தில் சொல்லியபடி வெண்கலபற்பஞ் செய்துசாப்பிட கூஷயரோகம், சூலைமாந்தை, வாய்வு, குன்மம்தீரும்.
15-வது	கிராபற்பஞ்செய்துசாப்பிட நீர்க்கிரிச்சினம், வண்டுகடி, சில்விஷங்கள், கூஷயரோகம், குஷ்டம், 18-சூலைபோம்.
15-வது	பித்தளைப்பற்பஞ் செய்து சாப்பிட வாய்வு, குன்மம், கிராணிமூலம், பாண்டு, நீர்ச்சுரப்பு, வாய்நீரூறல், குடல் வாய்வு, பார்சல் வாய்வு தீரும்.
16-வது	ஒழுகரைப் பற்பம் சாப்பிட பாண்டு, சோகை, விக்கம், மகோதரம், நீராம்பல், போம்.
16-வது	பால்கருடக்கல்பற்பம்சாப்பிடஉஷ்ணம், தேகக்கடுப்பு, எலும்புருக்கி, உள்வறட்சி, அஸ்திச்சூடும் போம்.
17-வது	கல்நார்பற்பம்சாப்பிடகூஷயமிருமல், காசம், சுவாசகாசம், மந்தார காசம் போம்.
17-வது	நாகபற்பம் சாப்பிட குஷ்டம், குறைநோய், சில்விஷம், வாதவாய்வு, கிரந்தி, சூலை, பாண்டு, வயிற்றுவலி, மகோதரம், பாதவீக்கம், சந்துவாதம் போம்,
18-வது	வெள்ளி பற்பம் சாப்பிட குன்மம் நீர்க்கட்டு, ஆண்குறி சதையடைப்பு, மயக்கம், சுபம், மூச்செரிவு, மூக்குநீர்ப் பாய்ச்சல், பினிசம், மண்டைச்சூலை போம்.

19-வது தங்கபற்பம் சாப்பிட கூஷயம், காசம், கபம், யீளை, உள் மாந்தை, மகோதரம், குன்மம், வாய்வு, நீரம்பம், சூலை, கண்ணோய், குஷ்டம், கிரந்தி, நீரிழிவு, பிரமேகம்போம். இதைச்செம்பு வெள்ளியிற் கொடுக்க நாலுவயதாகும்.

20-வது கெந்தக பற்பம் சாப்பிட குஷ்டம், குறைநோய், கிரந்தி, சூலை. வயிற்றுவலி, சில்விஷம், வாதவாய்வு, மகோதரம் பாதவீக்கம், பாண்டுதீரும்.

21-வது மண்ரேப் பற்பஞ் சாப்பிட பாண்டு, வீக்கம், மந்தாரகா சம், விஷரோகம் போம்.

21-வது அஞ்சனக்கல் பற்பஞ் சாப்பிட மேகம் இருபதும்போம். தேக அழகுண்டாகும்.

22-வது தாளகபற்பஞ் சாப்பிட கூஷரோகம், மந்தாரகாசம், கபம், உள்மாந்தை, இருமலிளைப்பு, குறைநோய், காணாக்கடிவிஷம், குஷ்டம் போம்.

23-வது சாதிலிங்க பற்பஞ் சாப்பிட குன்மவாய்வு, சன்னிவா தம், பாரிசவாய்வு, சூலை, யீளை, இளைப்பும் போம்.

23-வது வீரபற்பம்சாப்பிட சூலை, குன்மம், பூராவாய்வும்போம். ஆனல்சரீரம் சட்டைவாங்கும்.

24-வது பொரிக்கார பற்பம் சாப்பிட நீர்க்கடுப்பு, அதிக நீரிறங் குதல், கல்லடைப்பு, சதையடைப்பும் போம்.

24-வது சாஸ்திரபேதி பற்பம் சாப்பிட சுரம், உஷ்ணங்களும் போம். தேகவுளைச்சல்களை நீக்கும்.

25-வது வெண்குந்திரிக்கபற்பம் சாப்பிட பல்கடுப்பு, பல்ரத்தம், பல்லுவலி, பல்லாடுதல் போம்

26-வது பவளபற்பம்சாப்பிட தேகபுஷ்டி, தேகஅழகுண்டாகும், இருமல், காசம்போம், இரத்தம்ஊறும்.

27-வது வயிரபற்பம் சாப்பிட தேகம் வச்சிரகாயமாகும். காய சித்தியாகும்.

27-வது இரத்தின பற்பம் சாப்பிட சகலவியாதியும், தேகவறட் சியும் போம்.

28-வது பாஷாண பற்பம் செய்து சாப்பிட சுரம்,குளிர்சுரம், நாவறட்சியும் போம்.

29-வது சாரபற்பம் சாப்பிட வாய்வுக்கட்டி, ஆம்பல்க்கட்டி, குன்மம், கபரோகம் போம்.

30-வது உப்புபற்பஞ் சாப்பிட வாய்வு, பாரிசவாய்வு, சூலை, மகோதரம், நீர்த்தோஷம் போம். இந்தஉப்பை வெள்ளி செம்பில் கொடுக்க வயதைந்தாகும்.

32-வது ஆமையோட்டுப்பற்பம் சாப்பிடகண்களின் வியாதி 96ம் முயலகன் ரோகமும் போம்.

32-வது முத்துபற்பஞ் சாப்பிட வாயுவும், பிரமேகம், நீரிழிவும், போம் பல்லிறுகும், பல்வலிபோம்.

36-வது பொன்னிமிளைப் பற்பம் சாப்பிட எட்டுகுன்மம், சூலைக் கட்டு, விப்புருதிக்கட்டு, அரையாப்புக் கட்டி போம்.

சுண்ணம்.

33-வது கற்பூரச்சுண்ணம் சாப்பிட தேகம் வச்சிரகாயமாகும், கண்பிரகாசமாகும், வாய்ரோகம், மலசலக்கட்டு நீங்கும்.

34-வது துருசுச்சுண்ணம் சாப்பிடவாதவாய்வு போகும், இந்தச் சுண்ணத்தால் வகாரமுடியும்.

செந்தூரம்.

12-வது தாமிரச் செந்தூரம் சாப்பிட எட்டுகுன்மமும், குஷ்ட ரோகமூன் நீரும்.

முழுகுந்தைலங்கள்.

38-வது சந்தனத்தைலம் முழுகிவர மேகமும், மேகநீரும் போம் தேகமிருகும்.

38-வது வில்லவேர்த்தைலம்முழுகிவர பித்தம், உஷ்ணம், மேகம், உள்சுரம் போம். கண்ணுக்குத் தெளிவு, தரும்.

39-வது வேங்கைப் பட்டைத் தைலம் முழுகிவர வாதசூலை பித்தம், பீனிசம், மண்டையிடி, சத்திப்பு, விக்கல் போம்.

46-வது வெட்டிவேர்த்தைலம்முழுகிவர, மண்டைச்சூலை, தேமற் குஷ்டம், பிறநீற்கோர்வை, கண்புகைச்சல், காதுமந்தம், யிளையிளைப்பு, தேக எரிவுபோம்.

40-வது வேம்பின் பட்டைத் தைலம் முழுகிவர வாதம், சூலை, குஷ்டம், நீரிழிவு, காப்பான் போகும்.

40-வது குறுக்தொட்டித் தைலம் முழுகிவர தினவுசொரி,சிரங்கு, குஷ்டம், கிரந்தி, சூலை, புண்புரைபோம்.

41-வது கொடுவேலித் தைலம் முழுக தினவு, சொரி, சிரங்கு, கிரந்தி, சூலைபோம்.

41-வது சீரகத்தைலம் முழுகிவர குஷ்டம், தழுதனை, வாந்தி, பித்தம், கிறுகிறுப்பு, சோகை, பாண்டு, கபாலசூடு, வாயுவும் போம்.

42-வது சூரிவித்துத் தைலம் முழுகிவர கிரந்தி, குஷ்டம், சூலை, குன்மம், கிராணி, உள்மூலம், மலக்கட்டு போம்.

43-வது கீழ்காய்நெல்லித் தைலம்முழுகிவர பித்தம், கிறுகிறுப்பு, தலைசுழற்றல், வாய்நீரூறல், மேலெரிவு, இரத்தபித்தம், யிளையிளைப்பு, கைகால்காந்தல், போகும்,வெளுத்தமயிர் கருக்கும், கண்ணெரிவு நீங்கும்.

43-வது சங்கம் வேர்த்தைலம் முழுகிவர குஷ்டம், சொரிசிரங்கு, கிரந்தி, சூலை, செங்கரப்பான், வண்டுகடி, சில்விஷங்கள், சோபம், இருமல் போம்.

44-வது அமுக்கிரா வேர்த்தைலம் முழுகிவர பீனிசம், மண்டையிடி, உஷ்ணமும்போம்.

44-வது இஞ்சித் தைலம் முழுகிவர மண்டையிடி, சூலை, பீனிசம், பீலாபீனைப்பும் போம்.

45-வது செம்முள்ளித் தைலம் முழுகிவர சயமீளை, மந்தாரகாசம், கண்ணில் நீர்வடிதல், அண்டவாய்வு, வீக்கம் விஷம், அரையாப்பு, கிரந்தியும் போம்.

45-வது சாரணைவேர்த் தைலம் முழுகிவர சகலவாதமும் போம் தேககுளிர்ச்சியுண்டாம்.

46-வது 49-வது அதிற்கட்டைத் தைலம் முழுகிவர நீர்த்தோஷம், மூம்,சகல மேகங்களும் போம்

47-வது அறுகம்வேர்த் தைலம் முழுகிவர மூலச்சூடு, கபாலச்சூடு, யோகச்சூடு, பித்தச்சூடும், நீர்க்கடுப்பும் போம்.

47-வது கொடுப்பைத் தைலம் முழுகிவர மண்டையிடி, பித்தக்கிறுகிறுப்பு, சன்னிதாகம், உட்சுரம், மேலெரிவு, கைகால்காந்தல், கண்ணெரிவு, எரிகுன்மம் போகும். கண் தெளிவுண்டாகும்.

47-வது கையாந்தகரைத்தைவம் முழுகிவர கண்ணெரிவு, தலைநோவு, செவிநோவு போகும். பீனிசம், மண்டையிடி நீங்கும்.

48-வது சவுரித் தைலம் முழுகிவர வாதகுட்டம், கரப்பான், வீக்கம் போம்.

48-வது செந்நாவற் பட்டைத் தைலம் முழுகிவர வாதபித்த சோகைபோம்.

49-வது கடற்பாசித் தைலம் முழுகிவர சகலவாத நோய்களுந் தீரும்.

சாப்பிடுந் தைலம்.

55-வது தும்மட்டித்தைலஞ் சாப்பிட கெற்ப பூச்சியைப்போக்கி கெற்பமுண்டாகும் இது கைகண்டமுறை.

57-வது பாகலிலைத் தைலஞ் சாப்பிட நீரடைப்பும், மலக்கட்டும், கிருமி கெற்பப் புழுவும் போம்.

62-வது சிவனார் வேம்புத் தைலம் சாப்பிட குட்டம், சூலை, கட்டிவிஷம்போம், கால்வெடிப்புக்கும், புண்களுக்குந் தடவிவர குணமாகும்.

62-வது வீழிவேர்த் தைலம் சாப்பிட குஷ்டம், வெண்குட்டம் போம்.

62-வது சேங்கொட்டைத் தைலம் சாப்பிட சகலநோயும்போம், நரைதிரை மாறும்,

63-வது தேற்றான் கொட்டைவிரைத்தைலம் சாப்பிட சகலவியாதியும் போம், தேக அழகுண்டாம்.

63-வது வெண்புரசுத் தைலம் சாப்பிட பதினெட்டு குட்டங்களுந் தீரும்.

64-வது வாலுளுவையரிசித்தைலம் சாப்பிட சகலநோயும், பத்து படைகளும் போம்,

64-வது கருஞ்சீரகத் தைலம் சாப்பிட சிரங்கு, குஷ்டம், சூலை, சுரப்பான், தழுதணையும் போம்.

64-வது அமுக்குரா வேர்த்தைலம் சாப்பிட சூலை. கிராணி, குஷ்டம் போம்.

64-வது ஓமத்தைலஞ் சாப்பிட சகலவியாதியும் போம், திரேகச் சுடுண்டாகும்.

64-வது சாரணைவேர்த் தைலம் சாப்பிட கிரந்தி, குஷ்டம், சூலை போம்.

65-வது வெந்தோன்றிக் கிழங்குத்தைலம் சாப்பிட 18 குட்டம் போம், காயசித்தியுண்டாம்.

மேற்பிரயோகத்தைலம்.

56-வது மூசுருமுட்டைத் தைலம் காதில்விட காது வலிபோம், காதுகேளாதது கேட்கும், சீழ்நிற்கும், காதடைப்புவிடும்

57-வது வெள்வேல் தைலம் வாயில் விட்டுக் கொப்பளிக்க பல்லிறுகும், வாய்ப்புண்ணுறும்.

கிருதம்.

50-வது பொன்னாங்காணிக் கிருதம் சாப்பிட உள்சுரம் மேகம் போம், கண்ரோகம் 18-ம் போம்.

50-வது சதாவேரிக்கிருதம் சாப்பிட வயிற்றிரைச்சல், பித்தம், கிறுகிறுப்பு, வயிற்றுக்கிருமி, செரியாமாந்தமும் போம்.

51-வது திரிகடுகுக் கிருதம் சாப்பிட 16 விதக்கரப்பான், சிரங்கு, குஷ்டம், கிரந்தி, கிருமி, கிராணிமூலம் போம்.

51-வது தூதுவளைக்கிருதம் சாப்பிட இருமல், கபம், உட்சுரம், தூப்பு, கக்கல் போம்.

52-வது வெள்ளுள்ளிக் கிருதம் சாப்பிட சன்னி பதினெட்டும் போம்.

56-வது கொம்பரச்சுக் கிருதம் சாப்பிட கிராணிமூலம், குறுச்சுவலி, மூலச்சூடு, காதடைப்புத் தீரும்.

குழம்பு.

5 -வது நவச்சாரக் குழம்பு சாப்பிட பெருவயிறு, மகோதரம் ஆம்பல்கட்டி, விஷபாகம், மலக்கட்டும் போம்.

சூ ர ண ம்.

53-வது மேனிச்சூரணம் சாப்பிட வாய்வு, மந்தம், சில்விஷம் போம், தீபனமதிகரிக்கும்.

54-வது சீரகச்சூரணம் சாப்பிட நீர்க்கடுப்பு, மேகம், உட்சுரம், குன்மம், எலும்புருக்கி தசையடைப்பு, தாகம், வாய்நாற்றம் போம்.

54-வது குரோசாணி யோமச் சூரணம்சாப்பிட கடுப்பு, யீளை, இளைப்பு, மூலச்சூடு போம்.

54-வது கொடிவேலிவேர்ச் சூரணம் சாப்பிட சூலை, கிரந்தி, குஷ்டம், வண்டுகடி, எலிகடிபோம்.

கி ய ா ழ ம்.

58-வது மருதோன்றி வேர்க்கியரழம் சாப்பிட மூறைச்சுரம், விஷச்சுரம், மூலவாய்வு, பித்தம், மாந்தம் போம்.

58-வது வெட்பாலைக் கியாழம் சாப்பிட வாய்வு, எரிச்சல் குன்மம் போம்.

58-வது 59-வது வில்வவேரு முன்னைவேரும் சேர்த்துக் கியாழஞ் செய்து சாப்பிட விக்கம், வாந்தி, உழலைதாகம், மூறைச்சுரம் போம்.

59-வது முத்தக்காசுக் கியாழம் சாப்பிட க்ஷயம், யீளை, யிளைப்பு, அதிகமூச்சு விடுதல் போம்.

59-வது திரிபலாதிக் கியாழம் சாப்பிட கபம், யீளை, யிளைப்பு, க்ஷயம், காச்சல் தீரும்.

60-வது சந்தனக் கியாழம் சாப்பிட சுரம், வாய்வு, சலதோஷம் சிரசுப்பித்தம் போம்.

60-வது வேம்புக் கியாழம் சாப்பிட புழுக்கிருமி, மந்தம், வாய்வும் போம்.

60-வது இருவேலிக்கியாழம் சாப்பிட வாய்வு, பித்தம், சோகைப்பாண்டு, அரோசிகம் போம்.

அ வி ய ல் கி ய ா ழ ம்.

60-வது பச்சிலைப்புட்டவியல் கியாழம் சாப்பிட சுரம், உட்சுரம், வாதவாய்வு போம்.

61-வது முசுமுசுக்கை அவியல் கியாழம் சாப்பிட வாதசுரம், விடாச்சுரமும் போம்

61-வது மூலிகை அவியல் கியாழம் சாப்பிட சுரம், வாதசுரம் போம்.

அகஸ்தியர் வைத்திய பூரணம் ஊரு அட்டவணை, முற்றிற்று.